# ஆத்தும ஆதாயகர்க்கு
# என்
# ஆலோசனைகள்



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# ஆத்தும
# ஆதாயகர்க்கு
# என் ஆலோசனைகள்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
**டாக்டர் அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
**நேரு வீதி, சூரம்பட்டி,**
**ஈரோடு – 9. தென்இந்தியா.**

FIRST EDITION - Oct 2004
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 47

**FOR DETAILS CONTACT**
**Rev. Dr. A. CHRISTOPHER**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98433 - 58824**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்
**யோபு ஞானப்பிரகாசம்**
நிறுவனர், I.P.A. சபைகள், கோயம்புத்தூர் – 12.

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான ஆவிக்குரிய தெய்வ மக்களுக்கு ஆத்தும நேசரின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இனிய நூலின் ஆக்கியோனாகிய பாஸ்டர். கிறிஸ்டோபருக்காக கர்த்தரை துதிக்கிறேன்.

எங்கள் ஸ்தாபனத்தில் உள்ள மூத்த போதகர்களில் ஒருவரான இவர் தெளிவாக சத்தியங்களை போதிக்கக்கூடிய சிறந்த வேத பண்டிதர். நல்ல பேச்சாளர். சிறந்த எழுத்தாளர். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தெய்வ மக்கள் தாங்கள் ஆசிர்வதிக்கப்பட்டதை நேரடியாகவே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ வாழ்வில் கனிகொடுக்கக்கூடிய பல்வேறு அனுபவங்களை குறித்து பல புத்தகங்களை எழுதி இருக்கிற இவர் ஆத்தும ஆதாயகர்களுக்கு என் ஆலோசனைகள் என்ற நல்ல நூலை வடித்திருப்பது மிகுந்த சந்தோஷம். இந்த நூல் ஆத்துமாவை ஆதாயப்படுத்த விரும்புகிற ஒவ்வொருவர்க்கும் இது நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பது உண்மை. அதிவேகமாக மாற்றம் கண்டு வரும் இன்றைய உலகிற்கு ஏற்ற வகையில் நமது அனுபவங்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

அதிசீக்கிரமாய் நடக்கப் போகிற இயேசுவின் வருகைக்கு முன்பாக மிகப்பெரிய ஆத்தும அறுவடை உண்டாக இந்த நூல் கருவியாக அமைய வாழ்த்துகிறேன்.

– ஆமென்.

## என்னுரை

இனிய வாசகர்களே!

இரட்சகர் நாமத்தில் வாழ்த்துக்கள். ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள் என்ற நூலை உங்களுக்கு அளிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த கடைசி காலத்தில் வேகமாய் அழிந்து வரும் கணக்கற்ற ஆத்துமாக்களை கர்த்தருக்குள் கொண்டுவர முறையாய் யுத்தம் செய்கிற ஒரு சேனை எழும்ப வேண்டும் என்பது என் வாஞ்சை.

எனவே தான் சரியான முறைகளை கடைபிடித்து ஆத்துமாக்களை சந்தித்து திரளாய் அறுவடை செய்ய இந்த நூலை தொகுத்து உங்களுக்கு வழங்கியுள்ளேன்.

இதுதான் சிறந்த வழி என்று நான் சொல்ல வரவில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட வெளிச்சத்தில் அனுபவபூர்வமாய் நான் ருசித்தவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இவைகளிலும் மேன்மை யானவைகள் உண்டு. அவைகளையும் ஆவியானவர் உங்களுக்கு கற்றுத் தருவாராக.

அவர் வருமுன்னர் அவருக்காய் ஆத்துமாக்களை ஆதாயம் செய்திடுவோம்! ஆயத்தமாக்கிடுவோம்!

அன்போடும் ஜெபத்தோடும்,
அவர் சேவையில்,
அ. கிறிஸ்டோபர்.

## படைக்கிறேன்

ஆதாமின் பாவத்தால்

ஆகாமல் போன மனுவை

ஆதாயம் செய்திடவே

ஆதிரையில் வந்து உதித்த

ஆத்தும நேசரே – இந்நூலை!

ஆசிர்வதித்திடும்!

– ஆக்கியோன்.

## ஆலோசனைகள்

1. தேவை – ஒரு மாற்றம்!
2. தேவை – ஆத்தும பாரம்!
3. தேவை – தொலைநோக்கு பார்வை!
4. தேவை – ஒரு புதிய பிரமாணம்!
5. தேவை – தெளிந்த புத்தி!
6. தேவை – புதிய யுக்தி!
7. தேவை – புதிய சக்தி!

# 1

## தேவை – ஒரு மாற்றம்!

**எ**ன் இனிய வாசகர்களுக்கு இரட்சகரின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த 47வது நூலை உங்களிடம் சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் வெளியிட்ட ஆத்தும ஆதாயம் செய்வது எப்படி? என்ற நூல் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் குறிப்பாக இளம் விசுவாசிகள் மத்தியில் குறிப்பிடத்தக்க கிரியை நடப்பித்தது என்பது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம்.

அதை வாசித்த அநேகர் எனக்கு கடிதம் எழுதினார்கள். கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்வது எத்தனை அவசியம் என்பதையும், அதை எப்படி செய்வது என்பதையும், தாங்கள் கற்றுக் கொண்டதாக அக்கடிதங்களில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இந்த நூலை வாசித்த பல ஊழியர்கள் என்னை அவர்கள் ஏற்பாடு செய்த "ஆத்தும ஆதாயகர் பயிற்சி முகாம்களில்" செய்தி அளிக்க என்னை அழைத்தனர்.

அப்படிப்பட்ட முகாம்களில் பலர் என்னை பல கேள்வி கேட்டு திக்குமுக்காட வைத்தனர். ஆத்தும



ஆதாயப் பணியில் ஏற்படக் கூடிய இன்னும் பல சிக்கல்களை அவர்கள் கேள்விகள் மூலம் அறிந்து கொண்டேன். சமுதாய சமய பழக்க வழக்கங்கள், இவைகள் நிமித்தமும், அரசியல் சூழ்நிலை இவைகள் நிமித்தமும் ஆத்தும ஆதாயப் பணியில் தங்களுக்கு ஏற்பட்ட இக்கட்டுகளை அவர்கள் விவரித்து கேள்விகளை எழுப்பின போது, அவர்களின் இந்த நியாயமான கேள்விகளுக்கு பரிகாரம் காண்பதுடன் அதனை அடுத்த புத்தகத்தில் அச்சிட்டு அவற்றை அறிவிக்க வேண்டும் என்ற ஆவல் எனக்குள் ஏற்பட்டது. அதன் விளைவே இந்த புத்தகம்.

இந்த பதினைந்து ஆண்டுகளில் உலகம் எவ்வளவோ மாறிவிட்டது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அரிய கண்டுபிடிப்பு என்று நம்மை பிரமிக்க வைத்த எத்தனையோ கருவிகள் தற்போது, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் பயனற்று மூலையில் முடங்கிப் போய் விட்டன. இப்படி உலகம் அதி வேகமாக மாறி வருகிற வேளையில் நாமும் நமது ஆத்தும ஆதாயப் பணியில் பழைய நடைமுறைகளை சற்று மாற்றி புதிய அணுகுமுறைகளை கையாள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இப்போது சகல துறைகளையும் ஆள்வது மின்ஊடகங்கள் தாம் (எலக்ட்ரானிக் மீடியாக்கள்) தொலைக்காட்சியும், இன்டர்நெட்டும் எல்லா துறையிலும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவைகளின் மேல் நமது ஆதிக்கத்தை செலுத்த வேண்டியது அவசியமாகி விட்டது.

எல்லோரும் டாடா சுமோவில் பயணம் செய்து கொண்டு இருக்கும் இந்த காலத்தில், நான் மாட்டு

வண்டியில் அவர்களை துரத்திப்பிடிப்பேன் என்று அடம்பிடிக்காதீர்கள். குறைந்த பட்சம் 'ஜீப்' கார் மூலம் அவர்களை துரத்திப் பிடிப்பேன் என்று உங்கள் சிந்தையை பழைமையை விட்டு புதுமைக்கு நேரே திருப்புங்கள். அப்போதுதான் ஆத்தும ஆதாயப் பணி இலகுவாகவும், இலக்கை தொடுவதாகவும் இருக்கும்.

ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்; பாடிக் கறக்கிற மாட்டை பாடிக்கறக்க வேண்டும் என்ற பழமொழியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எப்படியாகிலும் ஒரு சிலராவது இரட்சிக்கப்படும்படி எல்லாருக்கும் எல்லாம் ஆனேன் என்று பவுல் சொல்லுகிறபடி மற்றவர்கள் நிமித்தம் தேவையான சில மாற்றங்கள் நமக்கு அவசியம். அப்படி செய்வோமாயின் நமது வசனத்தைக் கேட்பவர்களை இரட்சித்துக் கொள்ள முடியும்.

நல்லது! இதோ இனி வருகிற பக்கங்களில் ஆத்தும ஆதாயப் பணியில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அனுபவங்களை ஆவிக்குரிய விதத்தில் எழுதுகிறேன். வாசியுங்கள், யோசியுங்கள்.

# 2

# தேவை – ஆத்தும பாரம்!

ஆண்டவரே, எனக்கு ஆத்தும பாரம் தாரும்! தாரும்! என்று பலர் ஜெபிக்கிறதையும், பாடுகிறதையும் பார்த்து இருக்கிறேன். இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களுக்காக கர்த்தரை துதிக்கிறேன்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஜெபித்து கேட்டு பெற்றுக் கொள்வதற்கு 'ஆத்தும பாரம்' என்பது பரிசுத்த ஆவியின் அபிஷேகமோ, வரமோ கிடையாது. எங்கோ இருந்து நமது உள்ளத்திற்குள் வருவது அல்ல, நமது உள்ளத்திலிருந்து புறப்பட்டு வெளியே வருவது தான் ஆத்தும பாரம் என்பதை முதற்கண் நீங்கள் அறிந்திட வேண்டும்.

ஆம்! ஆத்தும ஆதாயம் என்பது ஜெபிப்பதினால் வருவது அல்ல, நமது இருதயம் காயப்படுவதினால் ஏற்படுகிற இரத்தக் கசிவு என்பதை நீங்கள் அறிந்திட வேண்டும்.

நீங்கள் என்று கிறிஸ்துவிற்குள் பிறக்கிறீர்களோ, என்று வருகிறீர்களோ அன்றே உங்களுக்குள் ஆத்தும பாரம் வருகிறது, அல்லது வந்துவிட வேண்டும் என்பது

உண்மை.

அப்படி வராவிட்டால் நீங்கள் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முடியாது என்பது இரண்டாவது விஷயம், குறைந்த பட்சம் உங்கள் ஆத்துமாவையே உங்களால் கிறிஸ்துவுக்குள் நிலைப்படுத்த முடியாது என்பதுதான் உண்மை.

என்னுடைய சபையில் ஒரு சகோதரிக்கு குழந்தை பிறந்து மூன்று நாளில் மரித்து போய்விட்டது. அதற்கு எந்த நோயும் இல்லை. எந்த விபத்தும் ஏற்படவில்லை. ஆனால் பிள்ளை மரித்துவிட்டது. காரணத்தைக் கேட்டால் அசந்து போவீர்கள்.

குழந்தைக்கு பால் குடிக்கத் தெரியவில்லை. அதன் நாவு மேல் வாயோடு ஒட்டுகிறதே தவிர சூப்பி குடிக்கத் தெரியவில்லை. எவ்வளவோ முயற்சித்தும் அதன் வாயைத் திறந்து குடிக்க வைக்க முடியவில்லை. அதற்கு யார் ‘டியூசன்’ எடுப்பது, பரிதாபமாக மரித்துப் போய்விட்டது.

தேவனுடைய சிருஷ்டிப்பை சிந்தித்துப் பாருங்கள். பிறந்த குழந்தை யாரும் சொல்லிக் கொடுக்காமலே உணவை சூப்பிக் குடிக்கிறது. இது தேவன் பிறப்பிலேயே கற்றுத்தருகிற அத்தியாவசியமான அப்பியாசமாகும்.

இதைப் போன்று தான் ஆத்துமபாரம் அல்லது ஆத்தும தாகம் என்பது யாரும் சொல்லாமல் உங்களுக்குள்ளேயே தேவனால் வைக்கப்படுகிற விஷேசித்த இந்த அனுபவத்தை நீங்கள் பெற்று இருந்தால் பாக்கியவான்கள். பெறாவிட்டால் பரிதபிக்கத் தக்கவர்கள் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்தேயு 11 : 28 மிகவும் தெரிந்த வசனம் தான். “வருத்தப்பட்டு சுமை சுமந்து வருபவர்கள் சுமைகளை



அவர் ஏற்றுக் கொண்டு இளைப்பாறுதல் தருகிறார்” என்பது எவ்வளவு பெரிய பாக்கியம். ஆனால் அவர் அத்துடன் நம்மைவிட்டு விடுகிறாரா என்றால் இல்லை என்பது தான் உண்மை.

அடுத்த வசனத்தை கவனித்து பாருங்கள். என் நுகம் இலகுவாகவும், மெதுவாகவும் இருக்கிறது என்கிறார். அதாவது, பாரமான லோகத்தின் நுகத்தை (சுமையை) நமது கழுத்தைவிட்டு அப்புறப்படுத்துகிற அதே நேரத்தில், அந்த இடத்தில் மாற்றாக இலகுவான மெதுவான நுகத்தை (பாரத்தை) நமது மேல் தேவனே வைக்கிறார். அந்த புதிய நுகம் அல்லது பாரம் எது தெரியுமா? அதுதான் நீங்கள் வாஞ்சிக்கிற “ஆத்தும பாரம்” ஆம், நீங்கள் இரட்சிக்கப்பட்ட அன்றே உங்களுக்குள் தாகத்தையும் பாரத்தையும் தேவன் வைத்துவிட்டார்.

எனவே ‘ஆத்தும பாரம்’ தாரும் என்று ஜெபிக்காதீர்கள். ஆத்தும ஆதாயம் செய்ய கிருபை தாரும் என்று மாற்றி ஜெபியுங்கள்.

சிறந்த ஒரு ஆத்தும ஆதாயகரை வேதத்திலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவரைக் குறித்த அறிமுகத்தை யோவான் 1ம் அதிகாரத்தில் நீங்கள் காணலாம். இயேசு அந்திரேயாவை அழைத்தார். அவ்வளவு தான். தேவனுடைய வெளிச்சம் அந்திரேயாவுக்குள் பிரவேசித்தது. அவர் அப்பொழுதே ஆத்தும ஆதாயகரானார்.

அவர் என்ன செய்தார் தெரியுமா? உடனே தன் சகோதரனாகிய பேதுருவை இயேசுவினிடத்தில் அழைத்துக் கொண்டு வந்தான். அந்த பேதுரு சாதாரமானவன் அல்ல. பிற்காலத்தில் அப்போஸ்தலர்களில் முந்தினவனாகவும், ஆதி

திருச்சபையின் ஆரம்ப கால வித்தாகவும் விளங்கினான். அதுமட்டுமா, அவனது முதலாவது பிரசங்கத்திலே மூவாயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டனர்.

பிரியமானவர்களே! கிறிஸ்துவின் ஆச்சரியமான ஒளி உங்களிடத்தில் வருமானால் நீங்கள் ஆத்தும ஆதாயகர் மட்டுமல்ல, ஆயிரமாயிரம் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவரக்கூடிய தலைவர்களையும் உருவாக்குவீர்கள் என்பதற்கு இது நல்லதொரு சாட்சி.

ஒருவன் இரட்சிக்கப்பட்டால் அல்லது தேவ கிருபையை பெற்றுக் கொண்டால் அவனது முதல் பார்வையும் முதல் நினைவும் தனது சகோதரர் பக்கமாகவே திரும்பும் என்பது வேதம் காட்டுகின்ற வெளிச்சம். மட்டுமல்ல, ஒருவன் பாதிக்கப்பட்டால் அல்லது வாதிக்கப்பட்டால் அவனது முதல் பார்வையும், நினைவும் அவன் சகோதரன் பக்கமாகவே திரும்பும் என்பதும் வேதம் தருகிற வெளிச்சம்.

இதற்கு இரண்டு மேற்கோள்களை வேதத்திலிருந்து காண்பிக்க விரும்புகிறேன். கானான் தேசத்தை வேவு பார்க்க சென்ற வேவுகாரர்களை ஏற்றுக் கொண்ட வேசியான ராகாப் என்பவள் அவர்களுக்கு முன்பாக வைத்த விண்ணப்பத்தைப் பாருங்கள்.

"நீங்கள் என் தகப்பனையும், என் தாயையும் என் சகோதரனையும், என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடு வைத்து எங்கள் ஜீவனை சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்க வேண்டும்" என்றாள்.

எத்தனை அற்புதமான வார்த்தை பாருங்கள். அவள், தொழில் ரீதியாக வேசியாக இருந்தாலும், சமுதாய ரீதியாக வெறுக்கப்படத்தக்கவளாய், இருந்தாலும் அவள் இருதயத்திற்குள் எத்தனை ஈரம்! எத்தனை பாரம்!



எண்ணிப் பாருங்கள். தன் இனத்தையும் ஜனத்தையும் மீட்டுக் கொள்வதில் அவளுக்குத் தான் எத்தனை அக்கறை கவனித்துப் பாருங்கள்.

புதிய ஏற்பாட்டில் இயேசு சொன்ன லாசரு, ஐசுவரியவான் சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். அவன் பாதாளத்தில் வேதனைப்படுகிறபோது ஆபிரகாமை நோக்கி அபயக்குரல் இடுகிறான். அவன் என்ன கேட்டு வேண்டினான் தெரியுமா? லூக்கா 16 : 27,28ஐ வாசித்துப் பாருங்கள். "தகப்பனே எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன் என்றான்.

எத்தனை மனதுருக்கம் பாருங்கள். தான் அனுபவிக்கிற இந்த வேதனையான இடத்திற்கு தன் சகோதரர்களும் வந்துவிடக் கூடாது என்பதில் தான் எவ்வளவு கரிசனை!

எனக்கு இங்குதான் கேள்வியே எழுகிறது. ஒரு வேசிக்கும், ஐசுவரியவானுக்கும் இருந்த தன் வீட்டாரைக் குறித்த பாசமும் பாரமும் இரட்சிக்கப்பட்ட தெய்வ ஜனத்திற்குள் இல்லையே! அது ஏன்?

பிரியமானவர்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்பது வாக்குத்தத்தம். நீங்கள் இரட்சிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் உங்கள் குடும்பத்தில் மற்றொரு நபர் இந்த இரட்சிப்பிற்குள் வரவில்லையென்றால் அதன் முழு பொறுப்பும் நீங்கள் தான் என்பதை நினைவில் வையுங்கள்.

இன்றைக்கு எல்லோருமே அகில உலகத்தையும்,

ஆதாயப்படுத்துவதற்கு ஆலோசனை பண்ணுகிறார்கள், ஆசைப்படுகிறார்கள். நல்ல ஆசை தான். ஆக்கப்பூர்வமாக இது நடக்க வேண்டுமானால், அவரவர் அவரது குடும்பத்தாரை இரட்சிப்புக்குள் நடத்த நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோமானால் ஐந்தே ஆண்டுகளில் அகிலம் முழுவதும் ஆண்டவருக்குள் வந்துவிடும்.

நெகேமியா காலத்தில் எருசலேமின் அலங்கத்தைக் கட்ட திட்டமிட்டார்கள். இது மிகப்பெரிய பணி. அவ்வளவு எளிதாக, பொருளாதார ரீதியாகவோ, நிர்வாக ரீதியாகவே, மனித சக்தி ரீதியாகவோ முடியக்கூடிய காரியமில்லை. ஆனால் மிக சொற்ப நாட்களில் மிக அற்புதமாக அலங்கத்தை கட்டி முடித்து விட்டார்கள். இது எப்படி என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது எப்படி சாத்தியமானது தெரியுமா? அவரவர் அவரது வீட்டின் எதிரே இருக்கிற இடத்தில் அலங்கத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள். அவ்வளவு தான். மிக எளிதாக அலங்கம் பூர்த்தியாகி விட்டது.

முதற்கண் உங்கள் குடும்பத்தாரை ஆதாயப்படுத்துங்கள். உங்கள் சகோதரரைக் குறித்த பாரம் உங்களுக்குள் பெருகக்கடவதாக.

# 3

# தேவை – தொலைநோக்கு பார்வை !

ஆத்தும ஆதாய பணியில் அலட்சியம் பண்ணப்படுகிற அல்லது கண்டுகொள்ளாமல் விடப்படுகிற ஒருபெரிய கூட்டத்தைக் குறித்து இந்த அதிகாரத்தில் எழுத விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பாக என் வீட்டிற்குள் ஒருவர் வந்தார். அவரிடத்தில் நீங்கள் யார்? என்று வினவினேன், “பயிற்சி டாக்டர்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறேன். அறிவு பெருத்த அவர்களுக்கு அரிய பல தகவல்களுடன் ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்கிறேன்” என்றார். இந்த சங்கதியை என்னிடத்தில் சொல்லும்போது அவர்க்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. அதைக் கேட்டபொழுது எனக்குக் கூட மகிழ்ச்சி பொங்கத்தான் செய்தது.

ஆனால் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். அவரவர்கள் தங்களுக்கு வசதிப்படக்கூடிய, வசப்படக்கூடிய ஒரு கூட்டத்தைத் தெரிந்து கொண்டு ஊழியம் செய்கிறார்கள். ஆனால் எளிதில் வசப் படாத,

வருமானமில்லாத ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் மேல் பலருக்கு அக்கறை இல்லாதது மட்டுமல்ல, அந்த கூட்டத்தினருக்கு ஊழியம் செய்வது என்பது தங்கள் நிலைக்கு கீழானது என்று பலர் யோசிக்கின்றனர்.

ஒருமுறை ஒரு பிரசங்கியர், கூட்டத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பினார். அவரைப் பார்த்து வீட்டிலிருந்தவர்கள், “கூட்டம் எப்படி இருந்தது? எத்தனை பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்?” என்று கேட்டனர். அதற்கு இவர் இரண்டரை பேர் என்றார். “ஓஹோ! இரண்டு பெரியவரும் ஒரு சிறியவரும் தானே” பிரசங்கியார் வேகமாக சொன்னார், “இல்லை! இல்லை! இரண்டு சிறியவர் ஒரு பெரியவர்” என்றார். அதைக் கேட்ட அடுத்தவர்க்கு புரியாமல் விழி பிதுங்கி நின்றார்.

பிரசங்கியார் நிதானமாக விவரித்தார். “ஐயா, ஒரு பெரியவர் ஐம்பது வயதைக் கடந்து விட்டவர். வாழ்க்கையின் பாதியைக் கடத்திவிட்ட அவர் மீதி வாழ்க்கையைத் தான் இயேசுவுக்குக் கொடுத்தார். பிள்ளைகள் அப்படியல்ல, தங்கள் வாழ்க்கையின் முழுமையும் கொடுத்து விட்டார்கள். எனவே அவர்கள் முழுமையானவர்கள்.

இந்த பதிலைக் கேட்ட மற்றவர் சிரித்தார், சிந்தித்தார். நீங்களும் சிந்தியுங்கள். இப்பொழுது புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆத்தும ஆதாயகர்கள் பலரால் கண்டுகொள்ளாமல் விடப்படுகிற கூட்டம் சிறுவர்கள் தான்.

உண்மையில் உலக மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேல் எண்ணிக்கை உள்ளவர்கள் இந்த சிறுவர்கள். இந்த பெரிய கூட்டத்தின் மேல் நாம் கரிசனை கொள்ளாவிட்டால், தரிசனமில்லாத குருடர்கள் என்பது தான் உண்மை.



அவர்கள் குழந்தைகள், விளையாட்டு பருவம், ஒரு காலம் வரும், அப்போது அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள் என்று சிலர் சித்தாந்தம் பேசுகிறார்கள். சிறுவர்களிடத்தில் ஊழியம் செய்வதால் நமக்கோ நமது சபைக்கோ என்ன வருமானம்? அதிகப்படியான செலவுதான்! என்று சிலர் பட்ஜெட் கணக்கு போடுகிறார்கள். சற்று யோசித்துப் பாருங்கள். பனிரெண்டு வயதுள்ள ஒரு சிறுவன் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இருபத்திரெண்டு வயது வாலிபன். அடுத்த பத்து ஆண்டுகளில் முப்பத்திரண்டு வயதுள்ள ஸ்திரமான விசுவாசி. அடுத்த பத்து ஆண்டுகளில் ஸ்திரமான விசுவாசி அல்லது மூப்பன். இப்படியிருக்க இளம் வயதிலேயே கிறிஸ்துவுக்குள் ஒருவனை கொண்டு வருவதே உறுதியான அஸ்திபாரம்.

எந்த சமுதாயம் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, அந்த சமுதாயம் எதிர்காலத்தில் ஆரோக்கியமுள்ள சமுதாயமாக இருக்கும். எந்த சமுதாயம் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, அந்த சமுதாயம் எதிர்காலத்தில் அறிவாளிகளையும், ஞானிகளையும் கொண்ட சமுதாயமாக இருக்கும்.

அப்படியே, எந்த சபை குழந்தைகளின் இரட்சிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, அந்த சபை பிற்காலத்தில் வளமான, ஊக்கமான ஊழிய ஆவி பெற்ற ஒரு பெரும் கூட்டத்தை உடைய சபையாக இருக்கும்.

வேதத்தில் உள்ள சம்பவங்களானாலும் சரி, வேதத்தில் உள்ள வாக்கியங்களானாலும் சரி, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப எழுதப்பட்டது அல்ல. அவைகள் சத்தியமானவைகள் சத்துவமுள்ளவைகள் என்பதே

உண்மை.

நமது இரட்சகர் உலகத்தில் இருந்த நாட்களில், "நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகள் போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" என்றும் "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள்" என்றும் சொன்னதை சற்று யோசித்துப் பாருங்கள்.

சமுதாயத்திலும், சபையிலும், குடும்பத்திலும் பிள்ளைகள் வளர்வது என்பது வேறு, வளர்க்கப்படுவது என்பது வேறு, நான் வளர்க்கப்படுவதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறேன். வளர்த்தல் என்பதற்கு வழி நடத்துதல் என்று நீங்கள் பொருள் கொள்ளல் வேண்டும். யாருக்கு பிள்ளைகளாக பிறந்தார்கள் என்பது முக்கியமல்ல, எப்படி வழிநடத்தப்படுகிறார்கள் என்பதே முக்கியம்.

I சாமுவேல் புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். ஆசாரியனாகிய ஏலிக்கு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் வளர்ந்தார்கள். அதே நேரத்தில் சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலியினால் வளர்க்கப்பட்டான்.

கர்த்தருக்கு விரோதமானவைகளை தன் பிள்ளைகள் செய்வதைக் கண்ட ஏலி, கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று விட்டு விட்டான். ஆனால் சாமுவேலையோ, "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சொல்ல வைத்து தெய்வத்தோடு உறவாட வைத்தான்.

சற்று யோசித்துப் பாருங்கள். சரியான விதத்தில் நடத்தப்படாத ஏலியின் பிள்ளைகள் ஆகாதவர்களாகிப் போனார்கள். ஆனால் இளம்பிராயத்தில் சரியாய் நடத்தப்பட்ட சாமுவேல் ஆசிர்வாதமுள்ள தலைவனாய் மாறினான்.



பிரியமானவர்களே! இது நமக்கு நல்ல பாடம். சிறுவயதிலேயே தேவனுக்குள் பிள்ளைகளை கொண்டு வராவிட்டால் எதிர்கால சமுதாயம் கிரிமினல்கள் நிறைந்த கிறுக்கு உலகமாக மாறிவிடும்.

எனக்கன்பானவர்களே! பிள்ளைகளுக்கு நேராக உங்கள் கண்கள் திரும்புவதாக, உங்கள் இருதயங்களில் அவர்களைக் குறித்த சிந்தை ஊற்றெடுத்து பெருகுவதாக. தனக்கு வலுவான ஒரு சேனையை அமைக்க முழுமையான மனிதர்கள் பிடிக்க எண்ணி பிள்ளைகளைப் பிடிக்க பிசாசு வருகிறான். அவர்களை அவன் பிடிப்பதற்கு முன்பாக நீங்கள் அவர்களைப் பிடிக்க வேண்டும். அவர்களை இயேசுவோடு பிடிக்க வேண்டும். இப்படி செய்துவிட்டால் இந்த உலகமே இயேசுவின் சேனையாக மாறிவிடும்.

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழி உங்களுக்குத்தான் தெரியுமே. பிள்ளைகளை சந்திக்க வேண்டிய வயதில் சந்திக்காமல் விட்டு விட்டால் பின்நாட்களில் அவர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவது என்பது உவமையைச் சொல்லி விளக்க முடியாத அளவுக்கு கடினமான காரியம்.

இந்த அதிகாரத்தை நான் எழுதிக் கொண்டிருந்தபோது இந்தியாவையே குலுக்குகிற ஒரு நிகழ்வு தமிழகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வை தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியதை பார்த்த போது என் உள்ளமே உறைந்து போயிற்று. கும்பகோணம் என்ற இடத்தில் பள்ளிக்கூடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் எரிந்து கரிக்கட்டையாய் மாறி போனார்கள். இந்த கோர காட்சியை பார்த்த பெற்றோர்கள் தங்கள் எதிர்கால

கனவுகள் எல்லாம் பாழாய் போனது என்று பரிதபித்து அழுதார்கள். எனக்கோ, இந்த பாலகரின் ஆத்துமா எங்கே போகும் என்ற வேதனை. மரணம் அவர்களை சந்திப்பதற்கு முன் நாம் அவர்களை கிறிஸ்துவின் நிமித்தம் சந்திக்க வேண்டும் என்ற ஏக்கம் ஏராளமாய் பெருகிற்று.

என் ஆரம்ப கால ஊழியத்தில் அஸ்திபாரமே சிறுவர் ஊழியம் தான். அதற்காக நான் தெரிந்து கொண்ட பிள்ளைகள் விசுவாசிகளின் பிள்ளைகள் அல்ல. (அவர்களுக்குத் தான் இயேசுவை தெரியுமே, அவர்கள் தான் சபைக்கு போகிறார்களே. அவர்களுக்கு இன்னும் விவரமாய் சொல்ல விசுவாசிகளாகிய பெற்றோர்கள் இருக்கிறார்கள்.) தெருப்பிள்ளைகள். கிறிஸ்துவை அறியாதோர் வசிக்கும் பகுதியில், உலகம் என்னும் சாக்கடையில் மூழ்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை தூக்கி எடுத்து, தூய்மைப்படுத்தி, இரட்சிப்பின் துகில் உடுத்தி அவர்களை நிற்கச் செய்ய வேண்டும் என்ற துடிப்பில் என் கால்கள் ஓடின. அந்த நாட்கள் எனக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது.

இன்று நானும் என் ஊழியமும் எவ்வளவுதான் வளர்ந்து விட்டாலும், சிறுவர் ஊழியம் நடக்கிற இடத்தில் என் பங்கு என்று ஏதாகிலும் செய்யாமல் போவேனென்றால் எதையோ பறிகொடுத்தவன் போன்ற ஏமாற்றம் வந்துவிடும்.

என் சபையில் சிறுவர் ஊழியத்தை கவனிக்கின்ற ஆசிரியர்களில் ஐம்பது விழுக்காடு என் கண்முன்னே சிறுவர்களாக இவ்வகுப்புகளுக்கு வந்து பங்கேற்று கிறிஸ்துவை அறிந்து வளர்ந்து இன்றைக்கு தலைமைத்துவத்தைப் பெற்றவர்கள், இந்த இளம் தலைவர்களை பார்க்கும்போது என் உள்ளத்தில் ஏற்படும்



பூரிப்பு எனக்கும் என் இயேசுவுக்கும் மாத்திரம் தெரியும்.

உயிர்த்தெழுந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்து **என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக** என்று பேதுருவுக்கு கூறின வார்த்தைகளை (யோவான் 21 : 15) சிந்தித்துப் பார்த்தால் ஆடுகளின் மேல் எவ்வளவு கரிசனை இருக்கிறதோ, அவ்வளவு கரிசனை ஆட்டுக்குட்டிகளின் மேலும் ஆண்டவர்க்கு இருந்தது தெளிவாக தெரிகிறது.

## சிறுவர் ஊழியத்தில் கவனிக்க வேண்டியவை:

பிள்ளைகள் மிகவும் மென்மையானவர்கள். சில வேளைகளில் அவர்களுக்கு ஒன்றும் புரியாது. சில வேளைகளில் அவர்களுக்கு நம்மைவிட அதிகமாகவே புரியும். எனவே அவர்களை நடத்தும்போது சரியான உளவியல் அறிவும் நமக்கு இருந்திடல் வேண்டும்.

ஒருமுறை ஒருவர் கடவுள் பெரியவரா? சிறியவரா? என்று கேள்வி கேட்டார். ஒரு குழந்தை கடவுள் பெரியவர் என்று சொன்னது. மற்றொரு குழந்தை கடவுள் சிறியவர் என்று சொன்னது. கேள்வி கேட்டவருக்கு குழப்பம். எனினும் பிள்ளைகளையே விளக்கம் அளிக்கும்படி கேட்டார். "அவர் என்னை உள்ளங்கையில் வைத்திருக்கிறார். ஆகவே அவர் பெரியவர்" என்று முதல் குழந்தை சொன்னது.

இரண்டாவது குழந்தை என்ன சொன்னது தெரியுமா? "என் சின்ன இருதயத்திற்குள் அவர் தங்கியிருக்கிறார். ஆகவே அவர் சின்னவராக தானே இருக்க முடியும்" பிள்ளைகள் எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள் என்பதை விளக்கவே இஃதினை எழுதினேன். மட்டுமல்ல, பிள்ளைகள் சுயமரியாதையை எதிர்பார்க்கிறவர்கள், பாராட்டுதலை எதிர்பார்ப்பவர்கள், பரிவை எதிர்பார்ப்பவர்கள், பரிசை எதிர்பார்ப்பவர்கள்,

இவைகள் எப்படி சந்திக்கப் படுகிறதோ அதை வைத்து தான் அவர்கள் ஆர்வத்தையும், அக்கறையையும் காட்டுகிறார்கள்.

முதலாவதாக, நீங்கள் சிறுபிள்ளைகளை **தேடி போக வேண்டும்.** நீங்கள் ஆசிரியராகவும் அவர்களை மாணவராகவும் நினைத்துக் கொண்டு போவீர்களானால் ஆரம்பமே தோல்வியாக முடியும். நீங்கள் அவர்களை நேசிப்பவர்களாகவும், அவருடைய அக்கா, அண்ணன் என்ற உணர்வில் நெருங்கும் போது மாத்திரமே அவர்கள் விரும்பி வருவார்கள். சொல்வதற்கு செவி கொடுப்பார்கள்.

இரண்டாவதாக, **அதிகாரத்தோரணையில் பேசக்கூடாது.** அவர்களும் மேன்மையானவர்கள் என்று நீங்கள் அங்கீகரிக்கிறதை அவர்கள் உணரும்படி அவர்களை நல்ல வார்த்தைகளால் அழைக்க வேண்டும். (நாகரிகமாக) டேய், படா என்ற வார்த்தைகளை முழுமையாக தவிர்த்து விட வேண்டும். நீங்கள் அவர்களை மரியாதையாக நடத்துகிற விதத்தைப் பார்த்து அவர்கள் மறுரூபம் அடைந்து விடுவார்கள்.

மூன்றாவதாக, **நல்லதையே சொல்லுங்கள்.** நரகத்தை சொல்லாதீர்கள். சிலர் குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு நரகத்தின் பயங்கரத்தை சினிமாவை விட சூப்பராக விவரிப்பார்கள். அது நல்லது தான். ஆனால் அதைவிட நல்லது உண்டு. அது நமது இயேசுவின் அன்பு, தியாகம், அற்புதம் இவைகளை பிள்ளைகளுக்கு பாங்காய் சொல்லுங்கள். பயத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதல்ல. பாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளச் செய்யுங்கள். அப்படி ஏற்றுக் கொண்ட பிள்ளைகள் தான் முதிர்வயது வரைக்கும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பார்கள்.



நான்காவதாக, **பிள்ளைகளோடு நேரத்தை செலவிடுங்கள்.** ஒவ்வொரு பிள்ளையின் உள்ளத்திலேயும் ஒரு உள்அறை என்று ஒன்று இருக்கிறது. அதன் உள்ளே பல காரியங்களை பூட்டி வைத்துக் கொண்டு புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு கூட பேசி அந்த அறையை திறந்து அந்த புழுவை வெளியே எடுக்க வேண்டும். நல்ல வார்த்தையினால் அவர்கள் மனப்புண்ணை ஆற்ற வேண்டும்.

ஒரு ஊழியர் தன் வகுப்புக்கு வந்த குழந்தையிடம் இயேசுவைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். "இயேசு நம்ம அப்பா மாதிரி" என்றார். அவ்வளவுதான். அந்த குழந்தை 'ஒ'வென்று அழுதுகொண்டே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது. ஊழியர் பதைபதைத்து போனார். குழந்தையை பிடித்து கொண்டு கேட்டார், "நான் என்னமா சொன்னேன், நீ ஏன் அழுகிற" என்று கேட்டார். குழந்தை என்ன சொன்னது தெரியுமா? "எங்கப்பா தினமும் குடிச்சிட்டு வந்து என்னையும் என் அம்மாவையும் அடிப்பாரு, இயேசு நல்லவருன்னு இங்க வந்தா, இயேசு எங்கப்பா மாதிரின்னு சொல்றீங்களே, இனிமேல் என்னால அடியெல்லாம் வாங்க முடியாது.

நான் இதை எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு. தாய் தகப்பனுடைய நடத்தையால், இளம்பிராயத்திலேயே தங்களுக்கு ஏற்பட்ட பாலியல் கொடூரத்தினால், தாங்கள் கேட்ட, பார்த்த சில நிகழ்வுகளினால் மனநிலையில் பாதிக்கப்பட்ட உளவியல்படி உருக்குலைந்து போன பிள்ளைகள் மிக அதிகம் இருக்கிறார்கள். அவர்களோடுகூட பேசி அவர்கள் ஐயப்பாடுகளை நீக்கி குற்ற உணர்வை விட்டு வெளியே கொண்டு வந்து ஆழ்மன பாதிப்புகளை ஆற்றி, ஆண்டவருக்குள்

அவர்களை நடத்த வேண்டும்.

ஐந்தாவதாக, **அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.** பயந்து நடுங்கி கதிர் அடித்துக் கொண்டிருந்த கிதியோனைப் பார்த்து, ''பராக்கிரமசாலியே!'' என்று கர்த்தர் சொன்னார். புதிய ஏற்பாட்டில், ''நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியனே! கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய், உன்னை அநேகத்தில் அதிகாரியாக வைப்பேன்'' என்று உற்சாகப்படுத்தும் எஜமானனின் வார்த்தைகளை இயேசு கோடிட்டுக் காட்டுகிறார். உற்சாகப்படுத்துதல், பாராட்டுதல் என்பது மிக வீரியமுள்ள சக்தி ஆகும். குழந்தைகளின் செயலை அங்கீகரியுங்கள். அவர்களை பாராட்டுங்கள். பரிசுகளை கொடுங்கள். ஊக்குவிக்க வேண்டிய நீங்கள் பின் வாங்காதிருங்கள்.

எனக்கு இரண்டு ஊழியர்களை தெரியும். ஒருவர் சபையில் எல்லாமே முதிர்ந்த விசுவாசி. இன்னொரு ஊழியருக்கோ எல்லாமே சின்ன பிள்ளைகள். பெரிய விசுவாசிகளைக் கொண்ட ஊழியர் மற்ற ஊழியரைக் குறித்து சொல்லும்போது, ''அவன் என்னப்பா, சபையா நடத்தறான் சண்டே ஸ்கூல் நடத்துகிறான்'' என்று கிண்டலாக கமெண்ட் அடிப்பார். நடந்தது என்ன தெரியுமா? பத்தாண்டுகள் உருண்டோடி விட்டது. முதியவர்கள் இருந்த சபையில் பாதி பேர் பரம வீட்டிற்குப் போய்விட்டார்கள். ஆனால் அடுத்த சபையோ இருபத்திரெண்டு முதல் இருபத்தைந்து வயது வரையுள்ள வாலிபர்கள் நிறைந்த துடிப்புள்ள ஊழியம் செய்கிற சபையாய் ஜொலிக்கிறது.

அப்படியானால், முதலாம் நபர் என்ன செய்கிறார்? சபையை நடத்துகிறாரா? அல்லது முதியோர் இல்லம் நடத்துகிறாரா? என்று நீங்கள் கேட்பது என் காதில்



விழத்தான் செய்கிறது. அது நமக்கு தேவையில்லாத காரியம். விட்டு விடுவோம்.

ஸ்திரமான ஒரு சந்ததியை, திடமான ஒரு சபையை உருவாக்க நீங்கள் விரும்புகிறீர்களா? ஆரோக்கியமான சமுதாயத்தை, ஆசீர்வாதமான தேசத்தை காண விரும்புகிறீர்களா? உங்கள் கண்களை சிறுவர் பக்கமாகத் திருப்புங்கள். உங்கள் சிந்தையை அவர்கள் மேல் பாரம் கொண்டதாய் மாற்றுங்கள். கொஞ்ச நாளில் உங்களைச் சுற்றிலும் புதியதொரு மாற்றமும், தோற்றமும் கொண்ட புதிய சேனை ஒன்று முளைத்தெழுவதைக் காண்பீர்கள்.

# 4

# தேவை – ஒரு புதிய பிரமாணம்!

ஆத்தும ஆதாய பணியில் நூறு சதவீத வெற்றியைப் பெற பத்து புதிய பிரமாணங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த பிரமாணத்தின்படி உங்கள் பணி இருக்குமானால் கண்டிப்பாக நூறு சதவீதம் வெற்றியை உங்களால் காணமுடியும். அநேகர் அபரிவிதமாய் விதைக்கிறார்கள். ஆனால் அறுவடையைத் தான் காண்பதில்லை. அலட்சியம் அதற்கு காரணமல்ல, அறியாமை தான் அதற்கு காரணம் என்பது உண்மை. ஆவல் மிகுதியினால், ஆதங்கத்தினால் அவசர அவசரமாய் ஆண்டவரைப் பற்றி சிலர் சொல்ல முற்படுவதினால் ஆதாயத்திற்குப் பதிலாக ஆபத்தை வருவித்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்டோரின் செயல்களினால் ஆத்தும ஆதாய பணிக்கே இடறல் உண்டாகிறது.

ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண நாம் போகும் போதே பிள்ளை பிடிக்கறவங்க வராங்க என்று கேலி செய்யும் அளவிற்கு கேவலமாய் போய்விட்டது.



அமரிக்கையும், நம்பிக்கையுமே நமது பெலனாக இருக்கும். நம்முடைய அவசரமும் அதிவேகமும் எந்த லாபத்தையும் கொண்டு வராது. எனவே மிகப் பொறுமையாக இப்பொழுது கொடுக்கப்படுகிற பத்து கட்டளைகளின்படி உங்கள் ஆத்தும ஆதாயப் பணியைச் செய்ய உங்களை பழக்குவித்துக் கொள்ளுங்கள்.

**1. உறவை உண்டாக்கிக் கொள் :**

கிறிஸ்துவை அறியாத ஒருவரை நீங்கள் புதிதாய் காணும்போது சுவிசேஷத்தை சொல்ல முற்படாதீர்கள். மாறாக, உங்களுக்கும் அவருக்கும் இடையில் உள்ள தூரத்தை குறைத்து நெருக்கத்தை உண்டாக்கிக் கொள்ளும்படி உங்கள் உரையாடல் பொதுவானதாக இருக்கட்டும். அதன்மூலம் ஒரு பாலத்தை நீங்கள் உண்டாக்குகிறீர்கள்.

இதற்கு நம்முடைய ஆண்டவர் இயேசுவையும், அப்போஸ்தலர்களையும் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இயேசு சகேயுவை சந்தித்த பொழுது, ''சகேயுவே, இறங்கி வா! உன் வீட்டில் தங்குவேன்'' என்றார். அப்படியே சமாரியப் பெண்ணை பார்க்கும்பொழுது, ''தாகத்திற்குத் தண்ணீர் தா'' என்றார்.

இந்த இரண்டு சம்பவங்களை சிந்தித்துப் பாருங்கள். பொதுவான வார்த்தைகளை பயன்படுத்தி வலுவான தொடர்பை வளர்த்துக்கொண்டார். உரையாடலின் உச்ச கட்டத்தில் அவர்களாகவே பாவ உணர்வு அடைந்தனர்.

சமாரியாவிலிருந்து வனாந்தர மார்க்கமாய் போன பிலிப்புவின் செயல்பாட்டினை கவனியுங்கள். கந்தாகே என்பவளுடைய மந்திரி தன்னை கடக்கும் போது நீர் வாசிக்கிறது உமக்கு புரிகிறதா? என்று பொதுவான ஒரு

கேள்வியைக் கேட்டு உறவை உண்டாக்கி, உரிய நேரத்தில் இயேசுவை பிரசங்கித்தார். இந்த அணுகுமுறையே ஆத்தும ஆதாயப்பணிக்கு ஆரம்பமாகும்.

பொதுவான வார்த்தைகளைப் பேசுவதில் ஒரு இலக்கணம் இருக்கிறது. பொதுவாக பேச வேண்டும். எதை எதையோ பேசாமல், அவர்களுக்கு சம்பந்தமுள்ள காரியங்களையே பேச வேண்டும். ஒருவரிடம் பேசிய அதே வார்த்தைகளை மற்றவர்களிடம் பேச வேண்டும் என்று எண்ணக் கூடாது.

சகேயுவிடம், இன்று உன் வீட்டில் தங்குவேன் என்ற இயேசு அதே வாக்கியத்தை சமாரிய ஸ்திரியைப் பார்த்து சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒருமுறை நானும் எனது நண்பரும், இரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தோம். நீண்ட நேரம் இரயில் வரவில்லை. என் நண்பருக்கு ஆத்தும பாரம் பொங்கி எழுந்து விட்டது. எனவே, இரயில் நிலைய பெஞ்சில் அமர்ந்திருந்த ஒருவர்க்கு சுவிஷேசம் சொல்ல அருகே போய் அமர்ந்து விட்டார். அவரோ, சுவாரிசியமாக பேப்பர் படித்துக்கொண்டு இருந்தார். நண்பர் உறவை ஆரம்பிக்க உரையாடலை தொடங்கினார், ‘‘சார், தேர்தல் ரிசல்ட் எப்படி இருக்கும்?’’ அவர் சொன்னார், ஜெயலலிதா தான் வருவார் வரவும் வேண்டும்.’’ நண்பரோ, அப்படி சொல்லாதீங்க சார், கருணாநிதிதான் வரவேண்டும் என்று எதிர்ப்போடு போட்டார்.

அவ்வளவு தான், அந்த ஆசாமி திரு. கருணாநிதி மீது ஒரு இரயிலில் ஏற்றும் அளவிற்கு ஊழல் புகார்களை கொட்டி குவித்தார். நண்பரோ, விட்டபாடில்லை. இவர் பங்கிற்கு ஜெயலலிதா அம்மையாரைக் குறித்து ஊழல் பட்டியல் போட ஆரம்பித்தார்.



நடந்தது என்ன தெரியுமா? இந்த சூடான விவாதத்தை கேட்க இரயில் நிலையத்தில் காத்திருந்த பயணிகள் கூடி விட்டனர். அது மட்டுமா, இரண்டு கட்சியாய் பிரிந்து சொற்போர் புரிய ஆரம்பித்து விட்டனர். உறவை உண்டாக்கிக் கொள்ள நினைத்த இவர் உரசலைத்தான் உண்டாக்கினார். அப்பொழுது இயேசுவைப் பற்றி எங்கு சொல்வது, இரயில் வந்தபொழுது முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆளுக்கொரு பெட்டியில் ஏறிக் கொண்டனர்.

நான் என்ன செய்தேன் தெரியுமா? நமக்கேன் வம்பு என்று அந்த இரயிலையே விட்டு விட்டேன். மிகக்கவனமாக உங்கள் உறவை ஆரம்பிக்க உரிய வார்த்தைகளை உபயோகியுங்கள்.

பொதுவாக சம வயது உடையவர்களை தெரிந்து கொள்ளுங்கள். மட்டுமல்லாது ஆண்கள் ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் நற்செய்தியை பகிர்ந்து கொள்வது நல்லது. அதிக வயது வித்தியாசம் உள்ளவரிடத்திலோ அல்லது எதிர்பாலரிடத்திலோ நட்பு வைத்துக் கொள்ளும்படி முயற்சிப்பது நல்லதல்ல. அஃது செயற்கைத்தனமாகவும், விபரீத விளைவுகளை கொண்டு வருவதாகவும் இருக்கும். உங்கள் வார்த்தைகளை கேட்போர் தங்கள் இருதயத்தில் தோன்றும் ஐயப்பாடுகளை அல்லது அழுத்தங்களை பகிர்ந்து கொள்வது என்பது தயக்கத்தை கொண்டு வருவதாக இருக்கும்.

அதேபோல் உங்கள் உடையும் தோற்றமும் நட்பு கொள்வதற்கு ஏதுவாக இருத்தல் அவசியம். விநோதமான, வித்தியாசமான உடைகள் கூட நம்மோடு மற்றவர்கள் நெருங்குவதற்கு தடையாக இருக்கும். கவனமாயிருங்கள்.

**2. சத்தியத்தை பேசு சத்தமாய் பேசாதே :**

நட்புறவை வளர்த்துக் கொண்ட பிறகு சொந்தக் கதை, சோகக் கதைகள் எல்லாம் பேசக்கூடாது. நேரடியாக, சத்தியத்தைப் பேச ஆரம்பித்து விடவேண்டும். இயேசு, ‘இந்த வீட்டிற்கு இன்று **இரட்சிப்பு** வந்தது’ என்று சகேயு வீட்டிலும், ‘ஜீவத்தண்ணீர்’ என்று சமாரிய பெண்ணிடத்திலும் நேரடியாக சத்தியத்தை பேச ஆரம்பித்துவிட்டதை கவனித்துப் பாருங்கள்.

அதைப் போலவே பிலிப்பும், ‘இந்த வார்த்தைகளை முன்னிட்டு இயேசு கிறிஸ்துவை பிரசங்கித்ததால்’ என்று அப். 8ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

நாம் சத்தியத்தைப் பேச வேண்டும். அதை சாந்தமாய் பேச வேண்டும். சிலர் சத்தமாய் பேசுவதனாலேயே சத்தியம் வென்று விடும் என்று நினைக்கிறார்கள். அது மகா தவறு கிறிஸ்தேசுவைப் பற்றிய சத்தியம் தனக்குத்தானே உரிமை உடையது. உங்கள் சத்தத்தினால் அதற்கொன்றும் வலிமை ஊட்ட வேண்டியதில்லை. உங்கள் வார்த்தை மேலோங்கி நிற்க வேண்டும் என்பதற்காக நீங்கள் சத்தியத்தை பேசுவீர்களாகில், “நம்மை அதட்டுகிறார், ஆளுகிறார்” என்கின்ற வெறுப்புணர்வு கேட்போரின் உள்ளத்தில் எழ ஆரம்பித்துவிடும். அவரின் கண்கள் உங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கும். செவியும், திறந்தே இருக்கும். ஆனால் சிந்தையோ சிதறி வேறொன்றை அசைபோட்டுக் கொண்டு இருக்கும். நீங்கள் சொன்னவைகளில் ஒரு விழுக்காடு கூட விதையாய் உள்ளே போயிருக்காது என்பது தான் உண்மை.

சத்தியத்தைப் பேசுவதற்கு நீங்கள் தயக்கம் காட்டக் கூடாது. கூடுமானவரையில் கிறிஸ்து செய்த



அற்புதங்களை விவரித்துச் சொல்லலாம். தேவைப்படுமாயின் சில மனிதர்கள் வாழ்க்கையில் கிறிஸ்து நடப்பித்த அற்புதங்களை சாட்சியாக சொல்லலாம். ஆனால் இந்த ஊழியர் மூலம் இப்படியெல்லாம் அற்புதம் நடக்கிறது என்று அந்த ஊழியரை முன் நிறுத்தி அவரை பல கோணங்களில் முக்கியப்படுத்தி எக்காரணத்தைக் கொண்டும் பேசாதீர்கள். அப்படி செய்வதால் அவர்கள் கிறிஸ்துவின் மேல் ஊன்ற கட்டப்படாமல் தனி மனிதரின் கிருபா வரங்களில் ஈர்க்கப்பட்டு பாறையின் மேல் விழுந்த விதை பலனற்று போனது போல பாழாய்ப் போகிறார்கள்.

**3. வாக்குவாதங்களை தவிர்த்து விடு :**

நாம் மற்றவர்களோடு நற்செய்தியை பகிர்ந்து கொள்கிறபோது எல்லோருமே எல்லாவற்றையும் அமைதலோடு ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணி விடக்கூடாது. சிலர் நம்மை திக்குமுக்காடச் செய்யும்படி வாதாட துவங்கி விடுவர், அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டியது அவசியமென்றாலும், பதில் சொல்வதை தவிர்த்து வாக்குவாதத்தை அணைத்துப் போட முடியுமா? என்று முயற்சிக்க வேண்டும்.

பதில் சொல்லாவிட்டால், நாம் அவர்களுக்கு முன்பாக குறைந்து போய் விடுவோமோ என்று எண்ணி உங்களின் ஞானத்தை வெளிப்படுத்தி வாக்குவாதத் ‘தீ’க்கு எண்ணெய் ஊற்றாதீர்கள், அப்படிச் செய்தால் அதன் முடிவில் கலக்கமும் களங்கமும் தான் ஏற்படும்.

ஏதாகிலும் ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து எவராகிலும் கேள்வி எழுப்பினால் அதைக் குறித்த பதில் உங்களுக்குத் தெரியாத பட்சத்தில், தெரியாது என்று ஒப்புக்கொள்ளத் தயங்காதீர்கள். அப்படித் தெரியாத

ஒன்றைக் குறித்து நீங்கள் வாக்குவாதம் செய்ய முற்பட்டால் அதன் முடிவில் நீங்கள் கேலிக்குறியவர்களாய் மாறி விடுவீர்கள்.

வாக்குவாதத்தை சமாளிக்க சிறிய எதிர்கேள்வியை நீங்கள் போடலாம். இந்த முறையை இயேசு கிறிஸ்து கடைப்பிடித்தார். தன்னிடம் கேள்வி கேட்டவர்களைப் பார்த்து, "யோவான் கொடுத்த ஞானஸ்நானம் யாரால் உண்டாயிற்று?" என்றார். சிக்கிக் கொள்வோம் என்று உணர்ந்த அவர்கள், "தெரியாது" என்று பதில் சொல்ல, "அப்படியானால் உங்கள் கேள்விக்கு நானும் பதில் சொல்ல முடியாது" என்று சொல்லி, எழும்ப இருந்த மிகப்பெரிய வாக்குவாதத்தை தவிர்த்து விட்டதை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

## 4. கேட்போரை பேச விடு :

தனித்தாள் ஊழியம் அல்லது ஆத்தும ஆதாயம் என்பது இருவழி தொடர்பு முறை. நீங்கள் பேசுவதை உங்களுக்கு எதிரே இருப்பவர் கேட்க வேண்டும். மட்டுமல்ல அவரைப் பேச வைக்க வேண்டும். அவர் பேசுவதை நீங்கள் கேட்க வேண்டும். அப்பொழுது தான் ஐயங்களையும், அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்டு அவர்களைத் தன் வசப்படுத்த முடியும்.

சிலர் தாங்களே பேசிக்கொண்டு இருப்பார்கள். கேட்பவர்களை பேசவிட மாட்டார்கள். அரை மணி நேரம் மூச்சு விடாமல் பேசி, ஜெபிக்கலாம் பிரதர் என்று சொல்லி அவர் சம்மதத்தை கேட்காமலேயே ஜெபித்து முடித்து விடுவர். இப்படி ஒரு காரியத்தை நான் நேரில் பார்த்தேன். அந்த நற்செய்தியாளர் போன பின்பு அந்த ஆத்துமாவை நோக்கி, அவர் என்ன சொன்னார்? அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டேன். அவர், 'நான் ஒன்றுமே நினைக்கலயா, ஏதாவது புரிஞ்சா தானே நினைப்பதற்கு' என்று நறுக்கென்றும், சுருக்கென்றும் பதிலுரைத்தார்.



இயேசுவின் தனித்தாள் ஊழியத்தைப் பாருங்கள். பாவியானாலும், ரோகியானாலும் அவர்களைப் பேச வைத்தார். அவர்கள் இருதயத்தின் அடித்தளத்தில் உள்ளவைகளை அவர்கள் வாயாலே வெளிக்கொணர்ந்தார். அதன் அடிப்படையிலேயே அடுத்த கட்ட பேச்சுக்களை அமைத்தார், ஆரம்பித்தார்.

## 5. ஐயப்பாடுகளை நிவர்த்தி செய் :

வாக்குவாதம் என்பது வேறு, சந்தேகக் கேள்வி என்பது வேறு. வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டுமே தவிர, நம்மைக் கேட்போரின் உள்ளத்தில் எழும்பும் ஐயப்பாடுகளுக்கு பதில் சொல்வதைத் தவிர்ப்பதோ, தட்டிக்கழிப்பதோ கூடாது.

சமாரிய ஸ்திரீயிடமும், நாத்தான் வேலிடத்திலும் இயேசு நடந்து கொண்டதை கவனித்துப் பாருங்கள். அவர்கள் தன்னிடம் கேள்வி கேட்ட போது, இயேசு தாய் உள்ளத்தோடு விவரித்துப் பதில் சொன்னதை நினைவில் வையுங்கள்.

சில தகவல்களை பெற்றுக் கொள்ளும்படி புதிய நபர்கள் கேள்விகளை கேட்கும்பொழுது, வேத புஸ்தகத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, வசனங்களை மேற்கோள்காட்டி, அவர்கள் ஐயப்பாடுகளை நீக்குவது நமது கடமை. சில வேளைகளில், சிலர் எழுப்புகிற கேள்விகள், முட்டாள்தனமாகவும், மூர்க்கத்தனமாகவும் இருக்கலாம். அவைகளைக் கேட்டு ஆத்திரப்படாமல்,

அக்கேள்விகளைப் பகுத்தறிந்து அவர்களின் அகக்கண் திறக்கும்படியாக அமைதலாக அர்த்தம் புரியும்படி பதில் சொல்லுதல் வேண்டும். அந்த பதில் அவர்களுக்கு திருப்தியை உண்டாக்கியதா என்பதை அவர்கள் வாய்மொழி மூலமாகவே ஆய்ந்து அறிந்திடல் வேண்டும்.

## 6. அடுத்தவர் பேச்சில் குறுக்கிடாதே :

நீங்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ ஒரு தனி நபரை சந்தித்து பேச சென்றிருக்கலாம். அப்படிப்பட்ட நேரங்களில் நான் இப்பொழுது எழுதுவதை கண்டிப்பாக கடை பிடித்தே ஆக வேண்டும். உங்கள் குழுவில் உள்ள யாராவது ஒருவர் மாத்திரமே அவரோடு பேச வேண்டும். அது யார் என்பதை முன்கூட்டியே நீங்கள் திட்டமிடல் வேண்டும். அப்படியல்லாமல் அந்த நபரிடம் சென்று ஆளாளுக்கு ஒன்று பேசினால் அவர் உட்கிரகிப்பதற்குப் பதிலாக உளச்சோர்வு அடைந்துவிடுவார்.

உங்களில் அனுபவமிக்க ஒருவரைப் பேச வையுங்கள். அவர் பேசட்டும். அது போதும். பேசுபவர்க்கும், கேட்பவர்க்கும் இடையில் ஏதாகிலும் உரையாடல் ஏற்படுமாயின் நீங்கள் அந்த உரையாடலை கவனிக்க வேண்டுமே தவிர உங்களுக்குத் தெரிந்த கருத்துக்களையோ, பதிலையோ இடையில் நுழைத்து சொல்லக்கூடாது. அப்படிச் செய்தால் உங்கள் சார்பாக பேசுகிறவரைக் குறித்து, “இவருக்கு ஒன்றும் சரியாகத் தெரியவில்லை” என்ற எண்ணம் கேட்பவர்க்கு வந்துவிடும். அதன்பின் அவரிடம் கேட்பதற்குப் பதிலாக, உங்களிடம் கேட்க ஆரம்பிப்பார். பிறகு என்ன நடக்கும்? எல்லோரும் பேச ஆரம்பிப்பார்கள். அது கலந்துரையாடலாக மாறுமே தவிர ஆத்தும அறுவடையைத் தராது.



உங்கள் ஸ்தானத்தில் நின்று பேசுகிறவர், சரியான பதில் தர முடியாமல் திக்குமுக்காட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், நீங்கள் பொறுமையாய் இருங்கள். அதே நேரத்தில் ஆவியானவர் தமது ஞானத்தால் அவரை நிரப்பும்படி மனதிற்குள் ஜெபியுங்கள். தக்க வார்த்தைகளினால் தேவன் அவரை நிரப்புவார். அவ்வேளைகளில் அவர் கொடுக்கும் சாதாரண வார்த்தைகளே சரியான பதிலாய் கேட்பவர்க்கு இருக்கும்.

## 7. உபதேசங்களை உதிர்க்காதீர் :

மத்தேயு கடைசி அதிகாரத்தில் இயேசு சொன்னதை கவனித்துப் பாருங்கள்.

1. **சுவிசேஷத்தை** பிரசங்கித்து, சீஷராக்குங்கள்.
2. நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் (சீஷர்கள்) கைக்கொள்ளும்படி **உபதேசம்** பண்ணுங்கள்.

புதியவர்களுக்கு சுவிஷேசத்தை அறிவிக்க வேண்டும். சுவிஷேசத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள் சீஷராகிறார்கள். சீஷர்களுக்கு உபதேசத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதுதான் வேத ஒழுங்கு.

ஆனால், இப்பொழுது எல்லாமே தலைகீழாக நடக்கிறது. வெளியிலே சுவிஷேசம் சபையிலே உபதேசம் என்ற நிலைமாறி, வெளியிலே உபதேசம் சபையிலே சுவிஷேசம் என்று ஆகிவிட்டது.

அன்று இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் தேவன் சபையிலே சேர்த்தார். இன்றோ, இரட்சிக்கப்படுங்கள் என்று அனுதினமும் சபையில் பிரசங்கம். அடிப்படைத் தவறுகளை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

எக்காரணத்தை முன்னிட்டும், புதியவர்களிடத்தில்

உபதேசத்தை திணிக்காதீர்கள். அப்படிச் செய், இப்படிச் செய் என்று சபையில் போதிக்க வேண்டியதை கிறிஸ்துவுடன் உடன்படிக்கை செய்யாத நபரிடத்தில் பேசாதீர்கள். அப்படிப் பலர் பேசிப்பேசியே ஒரு மாயத் தோற்றத்தை கிறிஸ்தவத்தைப் பற்றி உண்டாக்கி விட்டார்கள். அதனால் கிறிஸ்தவம் என்றாலே சிலபேர் காத தூரம் ஓடுகிறார்கள்.

நாங்களோ, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம் என்று பவுல் அடிகள் சொன்னதையே ஊன்று கோலாய் பிடித்துக் கொள்ளுங்கள். பாவம் – விழுகை – பாவப் பரிகாரம் – சிலுவை – பாவமன்னிப்பு – பாவத்திற்கு மரித்தல் – நியாயத் தீர்ப்பு இவைகளைத் தவிர புதியவர்களிடத்தில் வேறு எதையும் பேசாதீர்கள்.

நான் ஒரு பெந்தெகொஸ்தே சபையின் போதகன். உபதேசத்தை மிக அழுத்தமாக போதிப்பேன். ஆனால் புதிய ஆத்துமாக்களிடத்தில் என் அணுகுமுறையே வேறு. பல புதியவர்கள் என்னிடத்தில் வருவார்கள், “பாஸ்டர், கிறிஸ்தவனாகும் போது நகையெல்லாம் போடக்கூடாதாமே? அது அப்படியாமே, இது இப்படியாமே” என்று கேள்விகளை படு தாராளமாக கேட்பார்கள்.

இந்தக் கேள்விக்கெல்லாம் புதியவர்களுக்கு நான் பதில் சொன்னதே கிடையாது. சிரித்துக்கொண்டே, நெருங்கி போவேன். இதையெல்லாம் ஏங்கிட்ட கேட்டு நீங்க தெரிஞ்சுக்க கூடாது. வேதத்தை படித்துப் பார்த்து புரிஞ்சுக்கங்க. கிறிஸ்தவனாவதற்கு, நான் ஒரு பாவி என்ற உணர்வும், என் பாவத்திற்கு இயேசு மரித்தார் என்ற விசுவாசமும் தேவை. இவை இரண்டும் இருந்தால் நீங்கள் கிறிஸ்தவனாகிறீர்கள். தொடர்ந்து வேதத்தைப் படித்து அதற்கு கீழ்ப்படிந்தால் கிறிஸ்துவைப் போல் ஆவீர்கள் என்று சொல்லுவேன்.



இந்த பதில் இதுவரைக்கும் எனக்கு நூறு சதவீத வெற்றியைத் தந்திருக்கிறது. உபதேசத்தை புதியவர்களுக்கு சொல்ல முற்படாதீர்கள். அவசரப் படாதீர்கள். கவனமாயிருங்கள்.

## 8. ஜெபத்துடன் திரும்புக :

ஜெபமே ஜெயம்! ஆத்தும ஆதாயப் பணிக்கு இதுதான் திறவுகோல்; ஊன்று கோல். பலமுமல்ல, பராக்கிரமுமல்ல எனது ஆவியினால் ஆகும் என்று கர்த்தர் சொல்லுகிறபடி ஆவியானவர்தான் ஆத்துமாவை இரட்சிப்புக்கு நேரே திசை திருப்புகிறார்.

எனவே ஆத்துமாவை சந்திப்பதற்கு முன்பு எப்படி ஜெபிக்கிறோமோ அதைப் போன்றே நமது உரையாடலுக்குப் பிறகு அந்த புதிய நபரோடு ஜெபித்திடல் அவசியம்.

வெறுமனே நற்செய்தி அறிவித்துவிட்டு, நாம் திரும்பி விடுவோம் என்றால் அது உகந்த பலனைத் தராது. நாம் சொன்னவைகளைக் குறித்து சிந்திப்பதற்கும், தீர்மானம் எடுப்பதற்கும் முன்பாக அவரை வேறு ஒருவரோ அல்லது வேறு சூழ்நிலையோ சந்திக்குமாயின் அவர் முற்றிலும் திசை திருப்பப் பட்டுவிடுவார். நீங்கள் விதைத்த விதைகளை ஆகாயத்துப் பறவைகள் தின்று தீர்த்து விட்டது போலாகும்.

எனவே, நாம் யாருக்கு நற்செய்தியை அறிவித்தோமோ அவரோடு கூட அதிகபட்சம் ஐந்துநிமிடம் கூடுதலாக செலவிடவேண்டும். அந்த ஐந்து நிமிடம் எதற்குத் தெரியுமா? நாம் விதைத்த வசனங்களை

குறித்து அவரை சிந்திக்க வைக்க – பாவ உணர்வு அடையச் செய்ய – பாவத்தை விட்டுவிட தீர்மானம் எடுக்கச் செய்ய – கிறிஸ்துவுக்குத் தன் வாழ்வை அர்ப்பணிக்கத் தூண்ட,

பணிவான கனிவான முறையில் நம்மோடு ஜெபத்தில் கலந்து கொள்ள அவர்க்கு அழைப்பு கொடுக்க வேண்டும். அவரோடு கூட நீங்களும் சேர்ந்து கொண்டு ஒப்புக்கொடுத்தலின் ஜெபத்தை செய்ய வேண்டும். தன் சொந்த வாயால் இயேசுவை இரட்சகர் என்று அவரை அறிக்கையிட வைக்க வேண்டும்.

நீங்கள் சுவிஷேசத்தை அறிவித்து இதற்கான நேரத்தை ஒதுக்காவிட்டால் பாவத்தைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் தெரிவிக்கிறீர்களே தவிர மனந்திரும்ப வழியையோ வாய்ப்பையோ உண்டாக்குவதில்லை. இதனால் நியாயத் தீர்ப்பை அவர்கள் மேல் கூடுதலாய் குவிக்கிறீர்கள். எனவே அவர்களை நியாயத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கும் பொருட்டு ஜெபித்து விட்டு வாருங்கள், வந்த பின்னும் ஜெபியுங்கள்.

## 9. பின்தொடர்புக்கு குறித்திடு :

ஆத்தும ஆதாயம் என்பது ஒரே நாளில் முழுமை அடைந்து விடுகிற ஒன்றல்ல. அதற்கு கால அவகாசம் தேவை. ஒருவர்க்கு சுவிஷேசத்தை அறிவித்து விட்டால் அதுவே போதும் என்று எண்ணி விடக்கூடாது. ஒரு நபரை திரும்பத் திரும்ப சந்திப்பதில் (பின் தொடர்பு ஊழியத்தில்) தான் வெற்றியே இருக்கிறது.

கிறிஸ்துவை அறிவிப்பது, கிறிஸ்துவுக்குள் நடத்துவது கிறிஸ்துவில் வளரச் செய்வது இம்மூன்றும் தான் ஆத்தும ஆதாயத்தின் முப்பரிமாணம்.



கிறிஸ்துவை அறிவிப்பதற்கும் கிறிஸ்துவுக்குள் நடத்துவதற்கும் இடையில் கால அவகாசம் அதிகமாகவே தேவைப்படுகிறது. இந்த கால அவகாசத்தில் அடிக்கடி அந்த நபரை சந்தித்து பேசுதல் வேண்டும். அடிக்கடி சந்திப்பதென்றால், அஞ்சல்காரர் வீட்டிற்கு வந்து கடுதாசியைக் கொடுத்துவிட்டு, கடமை முடிந்ததப்பா! என்று போவதைப் போல் அல்லாமல் கரிசனையோடு பின்தொடர்பு ஊழியத்தை செய்திடல் வேண்டும்.

உங்களுக்கு வசதியான நேரத்தையல்ல. உங்களைக் கேட்பவரின் வசதிக்கொப்ப நேரத்தையும், காலத்தையும் முன்குறித்து அவரை சந்திக்க வேண்டும்.

சில விளையாட்டுப் பிள்ளைகள் திடீர் உற்சாகத்தில் செடிகளைக் கொண்டு வந்து வீட்டில் நடுவார்கள். அதற்குப்பிறகு தண்ணீரே ஊற்ற மாட்டார்கள். பின் அடுத்த விடுமுறை எப்பொழுது வருகிறதோ, அப்போது செடியைப் பார்க்க வருவார்கள். அந்தோ! காய்ந்த செடியின் பகுதி கூட அங்கு இருக்காது. இப்படித்தான் பின்தொடர்பு ஊழியம் இல்லாத ஆத்தும ஆதாயத்தின் பலனும் இருக்கும்.

குறைந்த பட்சம் ஏழு அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை அவர்களைத் தொடர்ந்து சந்திக்க வேண்டும்.

எதுவரைக்கும் இப்படி சந்தித்துக் கொண்டிருப்பது என்ற கேள்வி எழலாம். அவரை கிறிஸ்துவுக்குள், முதலாவது நடத்துகிறீர்கள். அதாவது ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்ய வைக்கிறீர்கள். அத்துடன் அவரை ஒரு ஆவிக்குரிய சபையில் இணைக்கிறீர்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் தேவன் சபையில் சேர்த்தார். அன்று முதல் அவரை நடத்தவும்

அவர் ஆத்துமாவிற்கு உத்தரவாதம் செய்யும் பொறுப்பை மேய்ப்பர் ஏற்றுக் கொள்கிறார். அதுவரை உங்கள் பின்தொடர் ஊழியம் நடந்தே ஆகவேண்டும்.

## 10. ஆதாயத்தை எதிர்பாராதே :

ஆத்தும ஆதாய பணி என்பது முற்றிலும் தியாகத்தின் பணி. இதில் எள்ளளவும் எள்ளின் முனையளவும் ஆதாயத்தை எதிர் பார்க்கக் கூடாது. கூடுமானால் ஆத்துமாக்களுக்காக நீங்கள் எதையாகிலும் இழக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

நீங்கள் சந்திக்கிற புதிய ஆத்துமாவின் பணமோ, பதவியோ உங்களை திசை திருப்பி விடக்கூடாது. சிலர் வெகு ஜோராக நற்செய்தி சொல்லுவார்கள். அந்த நற்செய்தி அவருக்குள் கிரியை செய்யத் துவங்கும் முன்பே தனது மகன், மகள் வேலைக்கு விவரம் கேட்பார், கடிதம் கேட்பார். சிலர் கட்டிட நிதிக்கு காணிக்கை கேட்பர். இப்படிப் பட்டவர்களால் வாழ்நாள் முழுவதும் முழுமையாக ஒருவரையும் ஆதாயப்படுத்த முடியாது.

எனக்கு ஒரு முதியவரைத் தெரியும். அவர் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியர். கையில் கத்தையாக கைப்பிரதிகளை வைத்திருப்பார். வீடு வீடாக போவார். நாலைந்து கைப்பிரதிகளைக் கொடுப்பார். சுவிஷேசத்தை சொல்வார். மறக்காமல் ஜெபிப்பார். எவ்வளவு சிறப்பு பாருங்கள். ஆனால் அவர் வந்தாலே பலர்க்கு அலர்ச்சி. கண்ணில் படாமல் மறைந்து கொள்வர்.

காரணம் என்ன தெரியுமா? ஜெபம் முடித்தவுடன், “ஆ! எல்லாரும் ஆண்டவர்க்கு காணிக்கை வையுங்கள்” என்பார். கொடுக்கும் வரை நகர மாட்டார். எனவே அவர் வந்தாலே வசூல் வாத்தியார் வருகிறார் என்று மக்கள் முகம் சுளிப்பர்.



பிரியமானவர்களே! இதை நான் எழுத வேண்டியது அவசியமாகி விட்டதினால் எழுதுகிறேன். ஒருவர் கிறிஸ்தவராகி விட்டால் காணிக்கை வாங்கலாம், டோனேசன் வாங்கலாம். வேலைக்கு உதவி செய்ய சொல்லலாம் தவறில்லை. காரணம், அவர் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு உடன் சகோதரர்.

ஆனால் ஒரு புதிய நபரிடம் நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. காரணம், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள். மேன்மையான அனுபவத்திற்குள் அவரை அழைக்கின்றீர்கள். அப்படிப்பட்டவரிடம் நீங்கள் கையேந்தி நிற்பீர்களாகில், நீங்கள் பெற்றிருக்கிற மேன்மையான அனுபவங்கள் கேள்விக்குறியாகிவிடும். உங்களைவிட, தான் மேன்மையான நிலையில் இருப்பதாக அவருக்கு எண்ணம் உதிக்கும். ஆத்தும இரட்சிப்பு பாதிக்கும், கவனமாயிருங்கள்.

உறவை உண்டாக்கிக் கொள்.
சத்தியத்தைப்பேசு சத்தமாய் பேசாதே.
வாக்குவாதங்களை தவிர்த்துவிடு.
கேட்போரை பேசவிடு.
ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்.
அடுத்தவர் பேச்சில் குறுக்கிடாதே.
உபதேசங்களை உதிர்க்காதீர்.
ஜெபத்துடன் திரும்புக.
பின்தொடர்புக்கு குறித்திடு.
ஆதாயத்தை எதிர்பாராதே.

இவைகள் பத்தும் கட்டளைகளல்ல, நியாயமான பிரமாணம். சரியாய் செய்தால் உரிய அறுவடையை பெற்றிடுவீர்கள்.

# 5

## தேவை – தெளிந்த புத்தி !

(கிறிஸ்தவர்களாகிய நமக்கு பெருமளவு பக்தி இருக்கிறது. ஆனால் போதுமான புத்தி இல்லை) என்று ஒரு பிரசங்கியார் தன் செய்தியில் சொன்னார். இது காட்டமான தாக்குதல் போல் தோன்றினாலும் இதுதான் யதார்த்தமானது என்று நானும் நம்புகிறேன்.

சர்ப்பத்தைப்போல வினா உள்ளவர்களாக இருங்கள் என்று நம்முடைய இரட்சகர் இயேசு சொன்னதை நாம் மறந்து விடக்கூடாது. இயேசு சொன்ன வசனத்தின் ஒரு பகுதியை அப்படியே பிடித்துக்கொண்டு கபடற்ற புறாக்களாய் கடந்து சென்று கண்ணியில் சிக்கி கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

இது உண்மையாய் நடந்த சம்பவம். எனது மனைவியின் மூத்த சகோதரன் ஆத்துமபாரம் கொண்டவர். ஒருநாள் ஆத்தும பார மிகுதியினால் ஒரு குடியிருப்பு பகுதிக்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றார். அவரைக் கண்ட ஒருசிலர் மிகுந்த வாஞ்சையோடு அவரையும், அவர் சொன்னவைகளையும் ஏற்றுக்கொண்டனர், இவருக்கு தாளமுடியாத சந்தோஷம். அடுத்த வாரமும் வருகிறேன் என்றார். அதைக்கேட்ட



அவர்களுக்கு மீளமுடியாத சந்தோஷம்.

அடுத்த வாரம் அதே இடம், அதே நேரம் இவர் ஆஜராகி விட்டார். அவர்கள் இவருக்காக ஆவலாய் காத்திருந்தார்கள், “இன்னும் அநேகர் உங்களுக்காக காத்திருக்கிறார்கள்” என்று பக்கத்திலிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள், அவர்கள் சொன்னபடி இவரின் வருகைக்காக அநேகர் காத்திருந்தார்கள்.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா? ஆத்திரமாய் அத்தனை பேர்களும் அவர்மேல் பாய்ந்தனர், ஆசை தீரு மட்டும் அடித்து தீர்த்தனர். அத்தோடு விடவில்லை, சவரன் செய்யும் பிளேடினால் பாள, பாளமாக முதுகில் கிழித்தனர், ரத்தம் சொட்ட சொட்ட வீதியில் தூக்கி வீசினர்.

அவரோ அறை மயக்கத்தில் சாலையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பழவண்டியின் மேல் சாய்ந்தார், அவ்வழியே பேருந்தில் வந்த ஒருவர் இவரை அடையாளம் கண்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தகுந்த சிகிச்சை அளித்ததினால் தப்பிப் பிழைத்தார்.

அவரைப் பார்க்க நான் சென்றிருந்தேன், தன் மேல் சட்டையைக் கழற்றி தன்முதுகை காண்பித்தார், முதுகு முழுவதும் காயமும், தையல்களும். இதைக் கண்ட என் கண்கள் கலங்கிற்று.

அவர் சொன்னார், “அழாதீங்க கர்த்தருக்கு ரத்த சாட்சியாக இருப்பது என்பது இதுதான்” இதை ஏற்றுக் கொள்ள முடியாமல், ஏற்றுக்கொண்டு திரும்பினேன்.

இரத்த சாட்சி என்பது இதுவல்ல, என்பது என் உள்ளத்திற்குள் தோன்றுகிற எண்ணமாகும். எதிர்ப்புகள் தடைகள் இவைகளை நேரடியாக சந்திக்க தைரியமாக புறப்பட்டுச் சென்று மனப்பூர்வமாக பாடுகளை ஏற்றுக்

கொள்வது தான் இரத்தசாட்சி.

சத்துரு விரிக்கும் வலையில் விவரம் தெரியாமல் சிக்கி சித்திரவதைக்குள்ளாவது வேதனை. இப்படிப்பட்ட வேளைகளில்தான் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நம்மை அழைக்கிறவர்கள் யார், நம்மைக் கேட்கிறவர்கள் என்ன சிந்தையில் கேட்கிறார்கள், என்பதை தெளிவாகப் பகுத்தறிய வேண்டும். வருகிற அழைப்பை ஆய்ந்து அறிந்து தெளிவான முடிவெடுத்து, அதன்பின்னரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நெகேமியா 4ஆம் அதிகாரம் 16,17 வசனங்களை இங்கு குறிப்பிடுகிறேன். அதைக் கவனித்துப்பாருங்கள். அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமை சுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலை செய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள், கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக் கொண்டவர்களாய் வேலை செய்தார்கள்; எக்காளம் ஊதுகிறவன் என்னண்டையிலே நின்றான்.

இந்த வசனங்களை வாசிக்கிறபொழுது எதிர்ப்புகள் மத்தியில் எழும்புகிற மதில்சுவர் உங்கள் கண்முன் நிற்கிறதா? இப்படித்தான் ஆத்தும ஆதாயப் பணியும் செய்ய வேண்டும். ஒரு பக்கம் ஆத்தும ஆதாயப் பணியை அயராது செய்ய வேண்டும். மறுபக்கமோ எந்தப் பக்கத்திலும் எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம் என்று எண்ணி அதை எதிர்ப்பதற்கு ஆயத்தத்தோடும் (ஆயுதத் தோடல்ல) விழிப்போடும் இருக்க வேண்டும்.

நம்மை அழைப்பவர்கள் கேடு உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்திரமல்ல, கேலிக்குரியவர்களாய் ஆக்க வேண்டும் என்ற



நோக்கத்தோடும் அழைப்பர், அதனை பகுத்தறிய வேண்டியது நமது முதல் கடமையாகும். நன்றாக இருப்பவனை பிசாசு பிடித்தவனைப் போலவும், கண் தெரிகிறவனை குருடனைப் போலவும் நடிக்க வைத்து நம்மிடத்தில் கொண்டு வருவார்கள். இதெல்லாம் ஆத்தும ஆதாயப் பணியில் அடிக்கடி சந்திக்கின்ற சிக்கல்கள், அதுவும் இந்த வித்தியாசமான காலத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிரான நண்பர்கள் இப்படிப்பட்ட வேடிக்கைகளை செய்வதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய ஊழியத்தில் இப்படிப்பட்ட சிக்கல் பல வந்ததுண்டு. இதுவரை அவைகளில் ஒன்றிலும் வெட்கப்படாதபடி தேவன் காத்துக் கொண்டார். ஒருமுறை கிறிஸ்துவின் அற்புதங்களை விவரித்துச் சொல்லிக் கொண்டிருந்தேன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த இருவர், "அன்றைக்கு இயேசு குருடரின் கண்களைத் திறந்தார், என்பதை ஏற்றுக் கொள்கிறோம், இன்றைக்கு அவரால் குருடரின் கண்களை திறக்க முடியுமா" என்று கேட்டனர்.

இந்தக் கேள்வியைக் கேட்ட பொழுது நான் திக்குமுக்காடிப் போனேன். ஆம்! என்று பதிலைச் சொன்னால், செய்து காட்டுங்கள் என்பார்கள், முடியாது என்று சொன்னால், "அப்படியானால் அவர் ஆண்டவரில்லை" என்பார்கள். சில நொடிப் பொழுது என் நாடியே அடங்கிப்போய்விட்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அவரால் முடியும் என்றேன்" அவ்வளவுதான் சிட்டென பறந்து சென்றார்கள். சில நிமிடத்திற்கெல்லாம் ஒரு குருடனோடு திரும்பி வந்தார்கள்.

இப்போது எனக்குப் பயம் வரவில்லை. "கர்த்தர்

அவன் கண்ணை திறந்தார். அந்த ஆத்துமா கர்த்தருக்குள் வரும், அவர் திறக்காமல் போனால் என் ஆத்துமா கர்த்தரிடம் போய்ச் சேரும்'' என்று என்னையே தேற்றிக் கொண்டு அந்தக் குருடனை நெருங்கினேன்.

இப்பொழுது நான் ஜெபிக்க ஆரம்பிக்கு முன்னே அவன் முகத்தை உற்றுப் பார்த்தேன். அது மிகத் தெளிவாக இருந்தது, தன்னால் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கமோ இவர்கள் ஜெபித்தால் பார்வை கிடைக்கும் என்ற ஊக்கமோ இரண்டு கூட்டத்தின் நடுவே சிக்கிக் கொண்டோமே, என்ற தாக்கமோ கிஞ்சிற்றும் அந்த முகத்தில் இல்லை. அந்தக் குருடன் பட்டாளத்து சிப்பாய் போல் விறைப்பாய் எனக்கு முன்னாலே நின்றேன்.

சில நிமிடங்கள் கடந்தும், எனக்கு ஜெபிக்க வாய் வரவே இல்லை, ''சரி இனி கூட்டமாய் நிற்க வேண்டாம் போலீஸ் வருகிறது ஓரமாய் நிற்போம்'' என்றேன். என் வார்த்தையைக் கேட்டு முதலில் ஓரமாய்ப் போனது யார் தெரியுமா? அந்தக் குருடன் தான், அதுவும் கண்ணைத்திறந்து கொண்டு'' அப்பொழுது தான் தெரிந்தது அவன் குருடன் அல்ல நடிகன் என்று, எனது அதிர்ச்சி வைத்தியத்தால் அத்தனைபேரும் வெட்கப்பட்டு போனார்கள்.

''எப்படியோ தப்பிச்சிட்டிங்க! என்று அசடு வழிந்தனர்.'' நான் தப்பிச்சது இருக்கட்டும் நீங்க எங்கிட்ட சிக்கிக்கிட்டீங்க'' என்று சிரித்துக்கொண்டே சொல்லி அவர்களை அமர வைத்து அரைமணி நேரம் அவர்களுக்கு தெளிவாக சத்தியத்தை எடுத்துச் சொன்னேன். அன்போடு அன்று பிரிந்தோம், அதன்பின் அவர்களை சந்திக்கவில்லை. அவர்களில் பலரை மகிமையில் சந்திப்பேன் என்று விசுவாசிக்கிறேன்.



இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்க்கவும், கையாளவும் தெளிந்த புத்தியும், நிதானமும் நமக்கு அவசியம், இதிலும் கூடுதலாக ஆவிகளை பகுத்தறியும் வரத்தை தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்வது சாலச்சிறந்தது.

எனக்கு ஒரு சகோதரனைத் தெரியும் மிகுந்த ஆத்தும பாரமுள்ளவர் உலகப்பிரகாரமான வேலை செய்தாலும், தனக்கு கிடைக்கும் கொஞ்ச நேரத்தில் ஆத்துமாக்களைத் தேடி ஓடுவார், ஆத்துமாக்களுக்காக அதிகம். ஜெபிப்பார், அதிலும் அவருக்கு பிசாசுகளைத் துரத்தும் வரம் இருந்ததினால் பிசாசு பிடித்தவர்களுக்காக ஜெபித்து விடுவிப்பார்.

ஆனாலும் விடுதலையை விரும்பி இயேசுவைத் தேடி வருகிறவர்கள் இவரது ஜெபத்தால் விடுதலை பெற்றபின் இயேசுவுக்குள் வருவதில்லை – சபைக்குள்ளும் வருவதில்லை, இதன் உண்மையான காரணத்தை ஆய்ந்து அறிந்திடல் வேண்டும்.

நீங்கள் ஆதாயப்படுத்துகிற – சந்திக்கிற ஆத்துமா கிறிஸ்துவுக்குள் வரவில்லையென்றாலோ – கிறிஸ்துவுக்குள் நிற்கவில்லையென்றாலோ அதற்கான கணக்கை நீங்கள் கொடுக்க வேண்டுமென்பதை மறந்துவிடாதீர்கள். மட்டுமல்ல, நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் குவிக்கிறார்கள் என்பதையும் நினைவில் வையுங்கள்.

நான் முன்னே சொன்ன சகோதரன் பிசாசுகளைத் துரத்துவார். அவர்கள் விடுதலை பெற்ற பின்னும் அவர்களை முன்புபோலவே நடத்துவார். ஏய், நீ, வா, போ என்றே பேசுவார், இப்படிப்பட்ட வார்த்தைகளை சொஸ்த புத்தி அடைந்தவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

அத்தோடு விடமாட்டார், யாரையெல்லாம் பார்க்கிறாரோ, “இந்தப் பொண்ணுக்கு ஏழு பிசாசு இருந்தது” “இவங்க அம்மாவுக்கு பதினேழு பிசாசு இருந்தது” என்று அறிமுகப்படுத்துவார். இந்த அறிமுகம் அவர்களுக்கு வெட்கத்தை கொண்டு வருவதினால் வேற்று மனிதர்களை சந்திக்க தைரியம் இல்லாமல் வேறு வழியாய் ஓடிப்போகிறார்கள்.

பிரியமானவர்களே! மக்கள் சுயமரியாதையையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள விரும்புவது நியாயமானதே. நம்மிடத்தில் வருகிறவர்கள் வயது குறைந்தவர்களாகவோ, அல்லது இன்றைய சமூக அமைப்பின்படி அந்தஸ்து குறைந்தவர்களாகவோ இருக்கலாம். அவர்களை இந்த உலகம் பார்க்கிறது போல நீங்கள் பார்க்கக்கூடாது. உலகம் நடத்துகிறது போல நீங்கள் நடத்தக் கூடாது. கிறிஸ்துவுக்குள் அவர்களைக் காக்க வேண்டும், மேன்மையாக நடத்த வேண்டும்.

அவர்கள் கிறிஸ்துவுக்குள் வந்து விட்டால் நம்முடைய உடன் சகோதரராகவும், கிறிஸ்து கொடுத்த அந்தஸ்த்தின்படி ராஜரீக ஆசாரியராகவும் மாறப் போகிறீர்கள், எனவே அவர்களின் தனித்தன்மை பாதிக்காதபடி கவனமான வார்த்தைகளைப் பேசி மேன்மையாக நடத்தத் தக்கதான தெளிந்த புத்தி உடையவர்களாய் நீங்கள் நடக்கவேண்டும்.

நான் சொல்வதை நீங்களும் யோசித்துப் பார்ப்பது நல்லது. வெண்ணெய் தயிரிலிருந்து வருகிறது. தயிரைக் கடைந்தால் வெண்ணெய் வருகிறது என்று சொல்லி பகல் பதினொரு மணிக்கு தயிரைக் கடைந்து பாருங்கள் வெண்ணெய் வருமா? வியர்வைதான் வரும். அதிகாலையில் பெண்கள் தயிரைக் கடைவார்கள். வெண்ணெய் திரண்டு வரும்.



எதற்கு இந்த வெண்ணெய் விளக்கம் என்று யோசிக்காதீர்கள். தயிரிலே வெண்ணெய் இருந்தாலும், அதைப்பிரித்தெடுப்பதற்கு காலநிலை என்பது மிகவும் அவசியம். அதைப் போலவே ஆத்துமாக்களை சந்தித்து நற்செய்தியை அறிவிக்க உற்ற நேரம் எது என்று கண்டுபிடித்து அவர்களை சந்தித்துப் பேசுவது அவசியம். இது மனிதருக்கு மனிதர் வித்தியாசப்படும். இதனைக் கண்டறியத்தக்க தெளிந்த புத்தி நமக்கு அவசியம்.

ஒரே நபரை பலமுறை சந்தித்திருக்கிறேன். குறைந்தபட்சம் ஏழுமுறை ஏற்பட்ட சந்திப்புகளில் ஒருமுறை கூட அவருக்கு சுவிசேஷத்தை நான் அறிவிக்கவில்லை. வீட்டில் சந்தித்தேன்; அவசரமாக அலுவலகத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். அலுவலகத்தில் சந்தித்தேன்; கோப்புகளில் மூழ்கியிருந்தார். வெளியில் சந்தித்தேன்; நண்பர்கள் நடுவில் இருந்தார்.

ஒருநாள் அவரே கேட்டு விட்டார். “ஐயா அடிக்கடி என்னைப் பார்க்க வருகிறீர்கள். ஹலோ சொல்லிவிட்டுப் போய் விடுகிறீர்கள், வேறு எதையுமோ பேசுவதில்லையே”

சகோதரரே உங்களிடத்தில் நான் பேச குறைந்தபட்சம் அரைமணி நேரத்திற்கு செய்திகள் உண்டு. ஆனால் என்னிமித்தம் உங்கள் அன்றாடப் பணிகள் பாதிக்கப்படக்கூடாது என்பது என் விருப்பம் என்றேன். அவர் சொன்னார் இந்த சனிக்கிழமை நான் உங்களுக்காக காத்திருக்கிறேன். நீங்கள் அவசியம் வரவேண்டுமென்றார்.

அவர் சொன்னபடி நான் சென்றேன். அமைதலான சூழ்நிலை எந்தவித இடையூறுகளும் இல்லை, நற்செய்தியை ஜெபத்தோடு சொன்னேன். அவர் மனந்திறந்து பேச ஆரம்பித்தார். எந்தவிதக்

குறுக்கீடுமில்லாமல் ஜெபித்தோம்.

என்ன நடந்தது தெரியுமா? அடுத்தநாள் அவரே ஆலயத்திற்குள் வந்துவிட்டார், இன்று அவர் நல்ல – உண்மையுள்ள விசுவாசியாக அவர் திருச்சபையில் இருக்கிறார்.

சற்று யோசித்துப் பாருங்கள், நான் அவசரப்பட்டு அவரது வீட்டில் சுவிசேஷத்தை அறிவித்திருந்தால், அலுவலகத்திற்குப் போக வேண்டிய அவசரத்தில் சத்தியத்திற்கு செவி கொடுத்திருக்க மாட்டார், அலுவலகத்திற்கு சென்றிருந்தால் கோப்புகள் நடுவில் கோபப்பட்டிருப்பார். நண்பர்கள் மத்தியில் சொல்லியிருந்தால் மனந்திறந்து பேசியே இருந்திருக்கமாட்டார். நான் விதைத்ததெல்லாம் விருதாவாய்ப் போயிருக்கும்.

எனவே பிரியமானவர்களே!

★ நம்மை அழைப்பவர்களைப் புரிந்து கொள்ள தெளிந்த புத்தி வேண்டும்.
★ நம்மைக் கேட்பவர்களை புரிந்து கொள்ள தெளிந்த புத்தி வேண்டும்.
★ நம்மிடம் வருபவர்களை மதித்து நடத்த தெளிந்த புத்தி வேண்டும்.
★ புதியவர்களுக்கு நற்செய்தியைச் சொல்ல தருணத்தை கண்டறிய தெளிந்த புத்தி வேண்டும்.

# 6

## தேவை – புதிய யுக்தி !

உலகம் அதிவேகமாக வளர்ந்து வருகிறது. எல்லாத்துறைகளிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் அதிக இடத்தைப் பிடித்திருக்கிறது. இதனை உலக மக்கள் ஆக்கிரமித்து தங்களுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். கிறிஸ்தவம் இதனைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டுவதினாலும் கால தாமதம் செய்வதினாலும் சுவிசேஷ பிரபல்யத்திற்கு மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டு விட்டது.

எனினும் இந்த இளம் தலைமுறையில் இஃதினைக் குறித்த விழிப்பும், விருப்பும் ஏற்பட்டிருப்பது போற்றுதலுக்குரியதாகும்.

ஐம்பது, அறுபதுகளில் வானொலியை வைத்திருப்பதும், கேட்பதும் தெய்வக் குற்றம் என்று பிரசங்கித்தவர்களும் உண்டு, எண்ணியவர்களும் உண்டு. ஆனால் இன்றளவும் அந்தரங்க கிறிஸ்தவர்களையும் சென்றடைய முடியா ஜனக்கூட்டத்தையும் சந்திப்பதில் இந்த வானொலி முக்கிய இடத்தை வகிக்கிறது. எனது செய்தி வானொலியில் வந்த போதுகூட அடையாத ஒரு

மகிழ்ச்சியை வேறொரு நாளில் பெற்று அந்த வானொலிக்காக கர்த்தரைத் துதித்த நாள் உண்டு.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, நானோ வியாதிப்படுக்கையில், மனமோ சோர்ந்து போயிருந்தது, என்னை ஆற்றவோ, தேற்றவோ ஒருவரும் என்னருகில் இல்லை, அன்று வந்த வானொலி செய்தியோ ஆண்டவரே என்னோடு பேசுவது போல இருந்தது, அது என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

இன்றோ தொழில்நுட்பம் ஊடகங்களை மக்கள் மத்தியில் வெகு எளிமையாக்கி விட்டது. எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள், செயற்கைக்கோள் ஒலிபரப்புகள், ஆனால் இவைகளை சினிமாத்துறையும் வர்த்தகத்துறையும் தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டனர். ஆத்தும ஆதாயகர்கள் இந்த ஆடியோ, வீடியோ தொழில் நுட்பங்களை சுவிசேஷ பிரபல்யத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

தொலைக்காட்சி பார்ப்பது, வைத்திருப்பது சரியா, தவறா என்ற பட்டிமன்றத்திற்கு நீங்கள் போக வேண்டாம். இந்த மீடியாக்கள் மூலம் யாரை சந்திக்கப் போகிறோம் என்பது தான் நமது குறி. கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப்பட வேண்டும். அவர்கள் எல்லாரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அத்தனை பேரும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால்தான். எனவே அவர்களை சந்திப்பதற்கு உரிய எளிய வழி தொலைக்காட்சிக்குள் நாம் நுழைவதுதான்.

இன்று தெய்வக் கிருபையால் எல்லாத் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும், தேவனுடைய வசனம் அறிவிக்கப்படுகிறதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன், ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

ஒட்டு மொத்தமாக மாதம் ஒன்றுக்கு பல கோடி



ரூபாய் இந்த வெகு ஜன தொடர்பு சாதனங்களுக்காக செலவிடப்படுகிறது, என்பது உண்மையானாலும், அந்த அளவுக்கு பிரதிபலன் இருக்கிறதா என்றால், பதில் சொல்ல யோசிக்க வேண்டியிருக்கிறது.

இதனை நடத்துகிறவர்கள் தங்களுக்கு வெற்றி கிடைத்து விட்டதாக சொல்லிக் கொண்டாலும் அடைய வேண்டிய இலக்கை அடைய தவறவிட்டோம் – தவறுகிறோம் என்பது தான் உண்மை.

இந்த மீடியாக்கள் மூலம் நடைபெறுகிற ஊழியங்களின் வேகத்தை விட மீடியாக்களை பயன்படுத்தாத ஊழியர்கள் வேகமாய் இருக்கிறது என்பது என்னுடைய கருத்துக் கணிப்பு.

யதார்த்தமாக யோசித்து, முறைப்படுத்தி மீடியாக்களை பயன்படுத்தினால் இன்னும் ஐந்தே ஆண்டுகளில் எண்ணிக்கைக்கு அடங்காத மடங்கில் இந்தியா சுவிசேஷ பிரபல்யம் அடைந்துவிடும்.

**தவறான அணுகுமுறை :**

இந்தியத் தொலைக்காட்சிகளில் அளிக்கப்படுகிற கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை சற்று அமர்ந்து ஆராய்ந்து பாருங்கள். அவைகளில் 99 விழுக்காடு சுவிசேஷமே கிடையாது என்பது உண்மை. நிகழ்ச்சியாளர்கள் என் மீது கோபப்படலாம், அதற்காக இப்போதைக்கு நான் வருத்தப்பட போவதில்லை. 1) தங்களைக் குறித்த விளம்பரம் 2) தங்கள் ஊழியத்தைக் குறித்த விளம்பரம் 3) தாங்கள் கடைபிடிக்கும் உபதேசத்தைக் குறித்த அழுத்தம், இவைகள்தான் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் வருகிறது. இன்னும் கூடுதலாக சொல்லப் போனால் தங்களின் அடுத்த திட்டத்திற்கு எவ்வளவு பணம் தேவை அதை சுலபமாக நீங்கள் எப்படி தரலாம் என்ற விளம்பரம் தான்.

யாரையும் தாக்குவது எனது நோக்கமல்ல. எனக்குள் ஏற்பட்டிருக்கிற புழுக்கத்தை, தெய்வ ஜனத்தோடு பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது, எது முக்கியம் சுவிசேஷத்தை அறிவிப்பதுதானே. உபதேசத்தை போதிப்பது, வேதபாடம் நடத்துவது, ஆகியவற்றை சபையில் வைத்துக் கொள்ளுங்கள். சந்திக்கு கொண்டு வராதீர்கள். ஆளுக்கொரு உபதேசத்தை அரைமணி நேரத்திற்கு ஒருமுறை மாற்றி மாற்றி சொல்வதினால் ஆத்துமாக்கள் இடறல் அடைகிறார்களே தவிர இரட்சிக்கப்படுவதில்லை.

என் அன்புத் தலைவர்களே! போதகர்களே! வானொலி, தொலைக்காட்சி செய்தியாளர்களே உங்களை கரம் குவித்து கேட்டுக் கொள்கிறேன். குறைந்தபட்சம் ஓராண்டு காலம் உங்கள் நிகழ்ச்சியின் தன்மையை மாற்றி விடுங்கள். முழுமையான சுவிசேஷத்தை அறிவிக்கும் நிகழ்ச்சிகளை ஆயத்தப்படுத்துங்கள் – அளியுங்கள்.

உங்கள் பொதுக்கூட்டங்களில் நடந்த அற்புதங்களை மிகைப்படுத்தி, காண்பிக்காதீர்கள். இயேசுவை உயர்த்தத்தான் காண்பிக்கிறோம் என்று டெக்னிக்காக பதில் சொல்லாதீர்கள். இப்படி ஓராண்டு காலம் எல்லா ஊழியர்களும், எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லா அலைவரிசைகளிலும், கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியைப் பிரசங்கித்தால் இந்தியாவின் இல்லங்கள் தோறும் இயேசு அமர்ந்திருப்பார்.

**தவறான தயாரிப்புகள் :**

ஒருநாள், தேவனுடைய செய்தியை கேட்க வேண்டும் என்ற ஆசையோடு தொலைக்காட்சியை இயக்கினேன். அது ஒரு கிறிஸ்தவ நிகழ்ச்சி, செய்தியாளர் வேறு மொழியில் செய்தி கொடுத்தார். அதற்கு தமிழில் டப்பிங் குரல் இன்னொருவர் கொடுத்திருந்தார், செய்தியாளரின் அபிநயத்திற்கும், வேகத்திற்கும், அவர் உருவத்திற்கும் பொருந்தாத வகையில் டப்பிங் வாய்ஸ் அமைந்திருந்தது, மொத்தத்தில் ஒரு கார்ட்டூன் பிக்ஸர் பார்ப்பது போல் இருந்தது. நிகழ்ச்சியை தொடர்ந்து பார்க்க முடியவில்லை. தொலைக்காட்சியை நிறுத்தவும் மனமில்லை. நம்ம நிகழ்ச்சியை, நாமே பார்க்கலையின்னா வேறு யார் பார்ப்பார்கள் என்ற எண்ணம் எழவே சகித்துக் கொண்டே அந்நிகழ்ச்சியை பார்த்து முடித்தேன்.



ஒரு உண்மையை சொல்லட்டுமா? நமது கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில் பலவற்றை கிறிஸ்தவர்கள் உட்பட, கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் பார்ப்பதில்லை, காரணம் தரமற்ற, சுவையற்ற தயாரிப்பு முறையே.

மார்டின் – ஆல் அவுட் கொசுவர்த்திகளின் விளம்பரங்களைப் பாருங்கள். எத்தனை முறை பார்த்தாலும், அவைகள் சலிப்பூட்டுவதில்லை. உலக மக்கள் எவ்வளவாய் யோசித்து, திட்டமிட்டு, நிகழ்ச்சிகளை தயாரிக்கிறார்கள். அதிக ஞானம் இருந்தும், தெய்வ பிள்ளைகள் இங்கு தான் தவறிவிடுகிறார்கள்.

ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் நல்ல கொத்தனார், நல்ல தச்சர், நல்ல பெயிண்டர் என்று தேர்ச்சி பெற்றவர்களைத் தேடுகிறோம். அவர்களெல்லாம் இரட்சிக்கப்பட்டவர்களா, இரட்சிக்கப்படாதவர்களா? என்று ஆராய்ச்சி செய்வதில்லை. ஆனால் நிகழ்ச்சிகளை தயாரிக்கும்போது இரட்சிக்கப்படாதவன் இசை அமைக்கக்கூடாது. எடிட் செய்யக்கூடாது, ஒலிப்பதிவு செய்யக்கூடாது என்று தேவையில்லாத முட்டுக்கட்டைகளை போட்டு மக்களை கவர்ந்திழுக்க

முடியாத தரமற்ற தயாரிப்புகளை உருவாக்குகிறோம். இது மாபெரும் தவறு, திருத்தப்படவேண்டும்.

சாலமோன் தேவாலயத்தை கட்டின பொழுது தீரு தேசத்தானாகிய ஈராமின் சிற்பாசாரிகள்தான் மர சிற்பங்களையும், கற்சிற்பங்களையும், உருவாக்கினார்கள். அதன் மூலம்தான் தேவாலயம் எழும்பினது. தேவாலயம் யாரால் கட்டப்பட்டது என்பது முக்கியமல்ல, அது பிரதிஷ்டை செய்யப்பட்ட பொழுது தெய்வ மகிமை இறங்கினது என்பதுதான் முக்கியம். எனவே நிபுணர்களை வைத்து நிகழ்ச்சிகளை தயார் செய்யுங்கள். வழங்குவதற்கு முன்பு அர்ப்பணித்து ஜெபியுங்கள். தெய்வ மகிமை வெளிப்படும். ஆத்துமாக்கள் உட்கார்ந்து பார்ப்பார்கள்.

கருணாமூர்த்தி என்பது வணிகரீதியாக தயாரிக்கப்பட்ட சினிமாப்படம். தென்னிந்திய திரைக்கலைஞர்கள் நேர்த்தியாக நடித்த படம். ஆனால் திரையிட்டபொழுது வந்த வேகத்திலேயே திரும்பி பெட்டிக்குள் அடங்கிவிட்டது.

ஆத்தும பாரம் உள்ள ஒருவர் இந்த படத்தை வாங்கினார். ஜெபத்தோடு இந்திய தெருக்களில் திரையிட ஏற்பாடு செய்தார். என்னே ஆச்சரியம் ! என்னே வரவேற்பு ! இன்றும் அதில் வரும் கல்வாரிக் காட்சியைக் கண்டு கதறி அழுகின்றனர். பல லட்சக்கணக்கானோர் இப்படத்தின்மூலம் கிறிஸ்துவை அறிந்து கொண்டனர். ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். நூற்றுக்கணக்கானோர் ஊழியத்திற்கு புறப்பட்டு விட்டனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் இயேசுவின் அடிமை என்று தன்னை சாட்சியாக நிறுத்துகிற முன்னாள் திரைப்பட நடிகர் AVM ராஜன் என்பது நீங்கள் அறிந்த



ஒன்று.

எனவே யார் நடித்தது? யார் எடுத்தது? யார் தயாரித்தது என்பது முக்கியமல்ல. எவ்வளவு பாரத்தில் எந்த அர்ப்பணிப்பில் எந்த வழியில் அளிக்கிறோம் என்பது தான் முக்கியம்.

நீங்கள் நிகழ்ச்சி தயாரிப்பாளராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் ஆத்தும ஆதாயகர்களாக இருப்பீர்கள் என்றால் இவைகளைக் குறித்து பொதுவான அறிவு இருத்தல் உங்களுக்கு அவசியம்.

இரட்சிப்பிற்கேதுவான – புதியவர்களுக்கு பயனுள்ளதான எந்தெந்த நிகழ்ச்சிகள் எந்த அலைவரிசைகளில், எந்த நேரத்தில் வருகிறது என்பதை அறிந்து வைத்துக்கொண்டு புதியவர்களுக்கு நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்வது நல்லது. அது உங்கள் ஆத்தும அறுவடைப்பணிக்கு வலுசேர்க்கும்.

புதியவர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப் படுத்துவதும், இரட்சிப்புக்கேற்ற செய்திகள் தாங்கி வருவதுமான ஒலி, ஒளி குறும் தட்டுகளை நாங்கள் கைவசம் வைத்திருக்கிறோம். பலருக்கு இஃதினை பரிசாகவோ அல்லது பார்க்கவோ தருகிறோம். அதனைப் பெறுவோர் தங்களுக்கு வசதியான நேரத்தில் குடும்பமாக குழுவாகப் பார்க்கின்றனர். கிறிஸ்துவின் மீட்பின் செய்தி, மிக எளிதாக வீடுகளுக்குள் நுழைந்து விடுகிறது.

கைப்பிரதி கொடுப்போர்களுக்காக கர்த்தரை துதிக்கிறேன். அவைகள் மூலம் கர்த்தர் இன்றும் கிரியை நடப்பிக்கிறார், பஸ்ஸில் பயணம் செய்வோர் உட்பட படித்தவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஊடகம் அது. அப்படிப்பட்ட ஊழியத்தை செய்பவர்கள் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப இந்த விநியோக முறையையும்,

கடைபிடிப்பது நல்லது. இதன் மூலம் படிப்பறிவு இல்லாதவர்களையும் படுக்கையில் இருப்பவர்களையும் மிக எளிதாக சந்தித்து விடுவீர்கள். இது ஒருவேளை அதிக செலவுள்ள திட்டம் என்று நீங்கள் யோசிக்கலாம், கணக்குப் போட்டுப் பார்த்தால் கைப்பிரதி ஊழியத்திற்கு ஆகும் செலவுதான் ஆகும். எழுபது ரூபாய் கொடுத்து வாங்குகிற ஒரு CD யை நூறு பேர் பார்த்தாலே போதும் 70 பைசா செலவில் ஒரு நபருக்கு முழு சுவிசேஷத்தை அறிவித்து விடுவீர்கள்.

எனவே பிரியமானவர்களே! தற்காலிக நவீன கண்டுபிடிப்புகள் அனைத்தும் நமக்குத் தான் சொந்தம். அவைகளை கண்டிப்பாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முறையாக பயன்படுத்தினால் நிறையவே ஆதாயம் உண்டு. இவ்வகை எலக்ட்ரானிக் மீடியாக்கள் தனிநபர் ஊழியத்திற்கும் வெகு ஜன ஊழியத்திற்கும் மிகுந்த பயனுள்ளவைகள். இரட்சிப்பிற்கேற்ற செய்திகளை தரமான முறையில் தயாரித்து, ஜெபத்தோடு ஊடகங்கள் வழியே கொண்டு செல்வோம். உலகை கிறிஸ்துவுக்கு சொந்தமாக்குவோம்.

# 7

## தேவை – புதிய சக்தி!

"பலமும் அல்ல, பராக்கிரமும் அல்ல,
என் ஆவியினாலே ஆகும்"

"என்னாலன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"

இந்த வசனங்களை ஆத்தும ஆதாயகர்கள் மறந்து விடக்கூடாது. புதிய பார்வை, தெளிந்த புத்தி, புதிய யுக்தி, நம்மிடத்தில் புதிய சக்தி இல்லாவிட்டால் ஆத்தும ஆதாயப் பணி என்பது அறுவடையில்லாத ஒன்றாகிவிடும்.

ஒவ்வொரு ஆத்தும ஆதாயகரும் வல்லமை பெட்டகங்களாக விளங்கவேண்டியது அவசியம். இந்த நிலைக்கு நம்மை உந்துவதும் உயர்த்துவதும் எது தெரியுமா? அதுதான் ஜெபம். அதுதான் ஆத்தும ஆதாயப் பணிக்கு ஜெயத்தைக் கொண்டு வரும்.

முழங்காலை தேய்க்காமல் செருப்புகளை தேய விடுவதினால் ஊழியம் செய்தோம் என்ற திருப்தி ஏற்படுமே தவிர, கனிகளை காண முடியாது.

என் ஊழியப் பாதையில் இதை அனுபவ ரீதியாக

உணர்ந்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான கைப்பிரதி களை ஒருவனாக கொடுத்திருக்கிறேன்.

நூற்றுக்கணக்கானவரை முற்சந்தியில் நிற்கவைத்து தெரு பிரசங்கம் செய்திருக்கிறேன். எண்ணிக்கைக்கு அடங்காதவர்களை தனியாக சந்தித்து கிறிஸ்துவை குறித்து அறிவித்து இருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் என்ற விவரத்தை சதவிகித கணக்கில் பார்த்தால் ஒரு சதவிகித்தினர் கூட இல்லை என்பது தான் யதார்த்தம்.

அந்த நாட்களில் இது மலை அளவு சாதனைப்போல் இருந்தது. நாட்கள் ஆக ஆக கனிகள் கிடைக்காததினால் சலிப்பும், சங்கடமும் தான் மிஞ்சியது. பின்னர் தான் நம்முடைய புத்தி, யுக்தி இவைகளுக்கு அப்பால் புதிய சக்தி வேண்டும் என்பதை கண்டறிந்தேன்.

இயேசு கிறிஸ்து பகல் எல்லாம் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். ஆனால் அதற்கு முன் அவர் என்ன செய்தார் என்பதை யோசித்துப் பாருங்கள். இங்கே இரண்டு வேத வசனங்களை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன், ‘‘எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்கு போனார்கள், இயேசுவோ ஒலிவ மலைக்கு போனார்’’ இரா முழுவதும் இயேசு ஜெபித்தார். அது மட்டுமா, அதிகாலை இருட்டோடே அதிக சத்தமாய் ஜெபித்தார் என்று வேதம் சொல்லுகிறது.

பிரியமானவர்களே! இயேசு போன இடங்களிலெல்லாம் ஜனங்கள் வசனத்தை கேட்க கூடி வந்ததற்கு இரகசியம் என்ன தெரியுமா? இயேசுவின் ஜெபம்தான்.

நாம் பிரசங்கிக்கும் போது அந்த வசனங்கள் இயற்கையின் விதிப்படி அவர்கள் காதில் கண்டிப்பாக நுழையத் தான் செய்யும். ஆனால் அவ்வசனங்கள் இருதயத்திற்குள் நுழையுமா? என்பது யோசிக்க



வேண்டிய ஒன்று.

அப்போஸ்தலர் நடபடிகளில் வருகிற (16ஆம் அதிகாரம்) ஒரு இனிய சம்பவத்தை கவனியுங்கள். சீஷர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இரத்தாம்பரம் விற்கிற பெண்ணாகிய லீதியாள் அங்கே வருகிறாள். கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தார். இதிலிருந்து என்ன புரிகிறது. திருவசனம் எல்லோர் காதுகளிலும் ஏறும். ஆனால் கர்த்தர் எவருடைய இருதயத்தை திறக்கிறாரோ அவர்களே இரட்சிக்கப்படுவார்கள்.

எனவே, நாம் ஜெபிக்கும்போது தேவன் தமது கிரியைகளை துவக்குகிறார். அதன்மூலம் ஆத்துமாக்கள் இருதயம் திறக்கப்படும், நமது ஆத்தும ஆதாயப் பணியில் கனி கிடைக்க ஆரம்பிக்கிறது.

இந்த அறிவு வந்தபிறகு என் போக்கை முற்றிலுமாக மாற்றிக் கொண்டேன். பலனே இல்லாமல் பல ஆயிரத்துக்கு சுவிசேஷம் அறிவிப்பதை விட பலன் பெறக்கூடிய வகையில் பத்து பேருக்கு சொன்னால் போதும் என்ற முடிவுக்கு வந்தேன். இது குறுகிய வட்டம் போன்று தோன்றினாலும் வீரிய செயல் என்பதை அனுபவபூர்வமாக கண்டுக்கொண்டேன்.

யாருக்கு சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமோ அவருடைய பெயரை குறிப்புச் சுவடியில் குறித்து வைத்துக்கொண்டு மணிக்கணக்காய் பல நாட்கள் அந்தரங்கத்தில் ஜெபித்துவிட்டு, அந்த நபரை சந்திப்பேன். சந்தித்த பின்னும் அவருக்காய் ஜெபிப்பேன். என்ன ஆச்சரியம் நான் விதைத்தேன், **விளையச் செய்கிற கர்த்தர்** அவர்களை வெகு விரைவில் தம்முடைய ராஜ்யத்திற்கு உட்பட்டவர்களாய் மாற்றிவிடுவார்.

**பரிசுத்த ஆவியின் வரம் :**

தேவை ஒரு புதிய சக்தி! அது என்ன சக்தி என்று கேட்கிறீர்களா? அப்போஸ்தலர் 1 : 8யை வாசித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது பெலன் அடைவீர்கள். அதாவது சக்தி அடைவீர்கள். எதை போன்ற சக்தி தெரியுமா? புதிய ஏற்பாட்டு எழுதப்பட்ட கிரேக்க மொழி வார்த்தையை இங்கு கோடிட்டு காட்ட விரும்புகிறேன். டுனாமிஸ் – இந்த வார்த்தையிலிருந்து தான் டைனமிட் என்ற வார்த்தையே வந்தது. அதாவது மலைகளை தகர்க்கும் **வெடி மருந்துக்கு ஒப்பான** சக்தி.

பரிசுத்த ஆவியானவர் வரும்போது நம்மை வரங்களால் நிரப்புகிறார். அதுதான் ஆத்தும ஆதாயர்களுக்கு அவர் அளிக்கிற சக்தி. தேவன் தமது வசனங்களை அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது அப்போஸ்தலர் காலத்துக்கு மாத்திரமல்ல நமது காலத்துக்கும் உரியது என்பதை மறந்து விடக்கூடாது.

பத்து பிரசங்கத்தை விட ஒரு அற்புதம் மிகவும் வீரியம் உள்ளது. அது உடனே மக்களை சிந்திக்க வைக்கும், கிறிஸ்துவுக்குள் சிறைப்படவைக்கும்.

1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தை கவனித்துப் பாருங்கள். 'வரங்களில் வித்தியாசம் உண்டு, ஆவியானவர் ஒருவரே' என்று குறிப்பிட்டு ஒன்பது வரங்களை குறித்து பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில், "வேறு ஒருவனுக்கு அந்த ஆவியினாலே அற்புதங்கள் செய்யும் சக்தியும்" அருளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளன. சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் நற்செய்தி அறிவிக்க போகும்போது யார் உங்களை கேள்வி கேட்பார். சூலமித்தியாளை பார்த்து "உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்று கேட்டபொழுது "என் நேசர் சிவப்பும் வெண்மையுமானவர்" என்று பதில் உரைத்ததாக உன்னதப்பாட்டில் காண்கிறோம்.



இப்படிப்பட்ட பதிலை எல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. சொன்னாலும் எடுபடாது. உங்கள் இயேசு எதினால் விசேஷித்தவர் என்று யாராகிலும் கேட்டால் அவர் இரட்சகர், பிசாசு அவருக்கு முன்பாக நடுங்கி ஓடும் என்று சொல்லிவிட்டு நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நிரூபிப்பதா? இது சாத்தியமா? என்று ஐயப்படாதீர்கள். பேதுரு, பவுல் ஆகியோரை பயன்படுத்தியதை விட உங்களை அதிகமாகவே தேவன் பயன்படுத்துவார். இதுதான் அவர் நமக்கு தந்து இருக்கிற வாக்குத்தத்தம். கடைசி காலத்தில் முன்மாரி, பின்மாரி ஊற்றுவேன் என்ற வசனத்தின்படி முன்மாரிக்கும் பின்மாரிக்கும் சொந்தமான கடைசி கால தலைமுறை நீங்களும் நானும் தான்.

உங்கள் பரமபிதா நன்மையான ஈவுகளை அருளுவது அதிக நிச்சயம். புதிய சக்தி அருளுவது அதிக நிச்சயம். போர் படைக்கு செல்லும் போர் படையே! புறப்படு, முறையான பயிற்சியும், கூர்மையான ஆயுதத்தையும் எடுத்துக் கொள். அதுதான் ஜெபமும், வரமும், முன்னேறிச் செல். அதோ வருகிறான், இந்த உலகத்தின் அதிபதி. அவன் ஆளுகைக்குள்ளே அடிமையாய் இருக்கும் ஆயிரமாயிரம் பேரை நீ விடுவிக்க போகிறாய்.

அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. காரணம், உன்னை அனுப்புகிறவர் அவர் அல்லவா! உனக்கு இருக்கும் இந்த புதிய சக்தியோடு போ. அறுவடை நிச்சயம். நீ வெல்வது சத்தியம்–சந்திப்போம்!

## எமது வெளியீடுகள்

31. நூனின் குமாரனாகிய யோசுவா
32. விசுவாச வீரனாகிய யெப்தா
33. எக்ளீசியா
34. சமயத்திற்கேற்ற பிரசங்க குறிப்புகள்
35. சிங்கத்தை கிழித்த சிம்சோன்
36. அன்புக்குரிய அப்போஸ்தலர்
37. எலியா
38. தெளிவூட்டும் தேன் துளிகள்
39. முற்றிலும் ஜெயம் பெறுவோம்
40. பிரசங்கிப்போருக்கு என் ஆலோசனைகள்
41. நீங்கள் தாழ்ச்சி அடைவதில்லை
42. தீர்க்கதரிசியாகிய எலிசா
43. பராக்கிரமசாலியாகிய கிதியோன்
44. தெய்வீக பிரசங்க குறிப்புகள்
45. அனல் மூட்டும் பிரசங்க குறிப்புகள்
46. ஆவியானவரும் அப்போஸ்தல நட படிகளும்.
47. ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள்
48. பொருத்தமான பொற்பழங்கள்

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**